அக்கரையூர்

மு. நாகா



# புயல் வாசித்த புல்லாங்குழல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R 11422
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயல் வாசித்த புல்லாங்குழல் !

அக்கரையூர்

மு. நூகா

**அ. இ. மு. லீ. வா. முன்னணி**
145, பிராந்திய அலுவலகம்
அக்கரைப்பற்று. இலங்கை

R11422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ பதிப்புரிமை பெற்றது

□ சர்வதேச தரப்படுத்தல் நூல் இல : 955- 9148- 00- 1

□ **PUYAL VASETHTHA PULLANG KULAL!**
( Free Verse )

□ Mu—Ruka

□ Copy write : Mu. Ruwaiza Kaleel

□ ISBN 955 - 9148 - 00- 1

□ Cover Designed by : A.M. Thaj

□ First Edition : December 1991

□ Published by :

All Ceylon Muslim League
145' Regional Office
Akkaraipattu
Sri Lanka

□ Printed by :

IPC Printers
Matharasa Road,
Akkaraipattu 01.

ACCESSION NO: 11422
CLASS NO: 894·811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்காளதேசத்து

பத்திரிகைகளெல்லாம்

பட்டிமன்றம் போட்டு

மாண்ட மக்களின் தொகையை

மதிப்பீடு நடத்தும் போது ...

இலங்கை

இளைய மகன்

இவன்

இரங்கற்பா நடத்துகிறேன்

இந்தா ... என்

படையல் உனக்காக !

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When

Bangladesh Media

estimates & debates

The death toll of

cyclone Victims

a yong son of

Sri Lanka

dedicates his

Sad solo

for the

aggrieved!

DEDICATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புயல் வாசித்த...

ஆசியுரை I ( அமைச்சர் இம்தியாஸ் பா. மா )
ஆசியுரை II ( அமைச்சர் அஸ்வர் )
ஆசியுரை III ( பங்காளதேஷ் தூதுவராலயம் )
ஆசியுரை IV ( அ. இ. இளம் எழுத்தாளர் சம்மே. )
பதிப்புரை V ( மு. வீ. கிழக்குமாகாண சம்மேளனம்)
திருப்பங்கள் திருத்திவைத்த விருப்பங்கள் (நூலாசிரியர்)

| | | |
|---|---|---|
| நானும் மன்னன்தான் ! | ...... | 17 |
| தோல்வி ! | ...... | 18 |
| வெற்றி ! | ...... | 22 |
| முதல் உதவி | ...... | 26 |
| காலையும் அதன் லீலையும் | ...... | 28 |
| பெண் | ...... | 32 |
| தீர்ப்பு சொல்லுங்கள் ! | ...... | 37 |
| விதவைகளின் விடியலில்,.. | ...... | 38 |
| விஞ்ஞான விளக்கம் | ...... | 47 |
| புயல் வாசித்த புல்லாங்குழல் ! | ...... | 42 |
| என்(ன) தேவை | ...... | 51 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| என்(ன) லாபம் | …… | 58 |
| அக்கரைப்பற்று | …… | 59 |
| நியாயம் கேட்கிறேன்… | …… | 73 |
| யாருக்கு நோன்பு ? | …… | 74 |
| சிந்தித்துப் பாருங்கள் ! | …… | 76 |
| அடுத்த விண்ணப்பம் | …… | 77 |
| கல்லறைக் காதல்! | …… | 79 |
| வித்தியாசமான விபச்சாரி ! | …… | 82 |
| குட்(டி) ஐடியா ! | …… | 83 |
| கண்ணீர் மானிகள் ! | …… | 86 |
| கைதவறிய அத்தானுக்கு… | …… | 87 |
| 'செல்' லுழுந்து செத்திடுவாய்! | …… | 96 |
| வாழ்க்கை ! | …… | 97 |
| நினைவூட்டுகிறோம் ! | …… | 98 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை I

கலை விழுதுகளை இயற்கையின் காணிக்கையாகப் பெற்றெடுத்த வளமான களம்தான் கிழக்கு மாகாணம் எனலாம். இலங்கையின் இலக்கியம் தொடர்பான நல்ல முயற்சிகள் அங்கிருந்துதான் ஆரம்பமாகின்றன. அதிலும் அவை முஸ்லிம்களிடமிருந்து அதிகமாக ஊற்றெடுப்பதில் எமக்கெல்லாம் பெருமை சேர்க்கிறது.

இந்தவகையில் கிழக்கின் ஓர் இழைய மகன் அக்கரையூர் மு. றாகாவின் இலக்கிய முயற்சிகள் பாராட்டத்தக்கது.

எமது அயல் தேசமான பங்காள தேசத்தின் அண்மைக்கால அனர்த்தங்களில் இலங்கை முஸ்லீங்களும் பங்கெடுக்கிறார்கள் என்பதை பாங்காய் விளக்க அவரின் 'புயல்வாசித்த புல்லாங்குழல்!' எனும் கவிதைத் தொகுதி, இலங்கை முஸ்லிங்களை மட்டுமல்ல இலங்கை அரசையும் இங்கு பிரதிநிதித்துவப்படுத்துவதை நாம் காணக்கூடியதாத உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் இம் முயற்சிக்கு ஆதரவாக நின்று வடிகான் அமைத்துக்கொடுத்த அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் கிழக்கு மாகாண சம்மேளனத்துக்கும் இம்முயற்சிக்காக கைகொடுத்து நிற்கும் ஜனாப் எம். ஐ. உதுமாலெப்பை அவர்களுக்கும் அவர் வழிநிற்கும் ஆதரவாளர்களுக்கும் என் தனித்துவ நன்றிகள் உரித்தாகுக.

முஸ்லிம் வாலிபர்களின் ஒளிமயமான சுபிட்ச எதிர் காலத்தை வாஞ்சித்து செயல்படும் முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தலைவர் என்ற முறையிலும், இளைய தலைமுறையின் அங்கம் என்ற ரீதியிலும் துடிப்புள்ள ஓர் ஆரோக்கியமான எழுத்தாளரான கவிஞர் மு. றூகாவின் இம் முயற்சிக்கு என் நல்வாழ்த்துக்களை வாயாற வாழ்த்தி நிற்கிறேன்.

அன்புடன்,

அல் - ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்
( வீடமைப்பு இராஜாங்க அமைச்சரும்
அ. இ. மு. லீ. வா மு, சம்மேளன தலைவரும் )
1991 - 10 - 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை II

புதுக்கவிதை என்பது பா வகைகளில் ஒன்று என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. புதுக்கவிதை ஒரு கவிதை வடிவந்தானா என்ற வாதப் பிரதிவாதங்கள் தற்போது நிகழ்வதில்லை. கடினமான இலக்கண விலங்கிலிருந்து விடுபட்டு, இலகுவாக்கப்பட்டுள்ள புதுக்கவிதையினால் பல நூற்றாண்டுக் கணக்கான இளம் எழுத்தாளர்கள் தோன்றிஇருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் இலக்கிய உலகில் நிலைத்து நிற்போர் எத்தனை பேர் என்பதுதான் கேள்வி.

முஸ்லிங்களை பொறுத்த அளவில், ஏராளமானோர் புதுக்கவிதை எழுதி வருகின்றனர். இவர்கள் நாவல் களோ, சிறுகதையோ, கட்டுரைகளோ அவ்வளவாக எழுதுவதில்லை புதுக்கவிதைகளையே விரும்பி எழுதி வருகின்றனர். கவிதை இலக்கியம் இலகுவாக்கப்பட் டமைதான் இதற்கான காரணம் என்று சொல்லலாம்.

எம்மத்தியில் சிறந்த புதுக்கவிதையாளர்கள் இருக்கி றார்கள். இந்தியக் கவிஞர்களுடன் ஒப்பிட்டுப் பேசக்கூடிய அளவுக்கும் இரண்டொரு கவிஞர்கள் காணப்படுவது கவனிக்கப்படலானது.

கவிஞர் அக்கரையூர் மு. நாகா எழுதியிருக்கும் இந்த ''புயல் வாசித்த புல்லாங்குழல்!'' என்ற புதுக்கவி தைத்தொகுதி பல விடயங்களை தொட்டுச்சொல்ல முயல்கிறது. புதிய கருத்து, புதிய அணுகுமுறை களும்; உத்திகளும் புதுக்கவிதைக்கு மெருகூட்டக் கூடியன. ஆயினும் எழுதப்படும் கவிதைகள் வாசக ருக்கு புரியவேண்டும். அந்த வகையில் நாகாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளில் பெரும் பகுதியை புரிந்துகொள்வது கடினமாக இருக்கிறது. நிறைய சிந்திக்கவேண்டியிருக்கிறது. ஆயினும், சில சொற்கள், வார்த்தைகள் புரியாப் புதிராகவே இருக்கின்றன. இத்தகைய நிலையை கவிஞர் தவிர்த்துக்கொள்வது நல்லது. மரபுக்கவிதைகள் விளங்கிக்கொள்ளக் கடினமாக இருக்கிறதென்றுதானே புதுக்கவிதைகள் தோன்றின இலகுவாக்கப்பட்ட புதுக்கவிதையே கடினமாகி விட்டதென்றால்...? கேள்விக்குறிதான்.

அக்கரையூர் மு. றூகா தனது கவிதைகளை நன்றாகவே எழுதியிருக்கிறார். படிமம், குறியீடு என்ற பெயரில் கையாளப்படும் வார்த்தைகளின் கடினத் தன்மையைச் சற்று குறைத்துக்கொண்டால் நிச்சயம் இவருக்கு நல்லதோர் எதிர்காலம் உண்டு என்று துணிந்து கூறலாம்.

கவிதைகள் பண்டிதர்களுக்கான ஒரு தனிச் சொத்து என்ற "மாயை" போக்கடிக்கப்படவேண்டுமென்றால், கடினச் சொற்பிரயோகங்களைக் கொண்ட செய்யுள் வடிவங்கள் மட்டுமல்ல புதுக்கவிதையின் சொற் பிரயோகங்களும் இலகுவாக்கப்படவேண்டும். ஆனால் கவிதை சொல்லும் அழகியல் தன்மை நிறைந்திருக்க கவிஞரின் முயற்சி இங்கு கவிதையை வெற்றிக் கம்பத்திக்கு இழுத்துவர முயல்கிறது.

கவிஞர் மு. றூகாவின் முயற்சி பாராட்டத் தக்கதே. எதிர்காலத்தில் எம்மத்தியில் சிறந்த கவிஞர்கள் உருவாக, இத்தொகுதி வித்தாக அமையும் என்று கருதுகிறேன்.

என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

அல் - ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message

It gives me immense Pleasare to introduce the poetry Book "A Flute that Tuned Cyclone" I have read the English translation of the poems contained in the Book and have found the writer's emotional association with Bangladesh very touching. Over the last few decades Bangladesh and its people have been victims of severe natural calamities mostly in the forms of cyclones. The severity of the cyclones that afflict Bangladesh every year can only be felt by those who live in its devastating path. It takes untold resiliences on the part of the nation to recover from the aftermath of these acts of nature.

The writer has brought oue of these aspects through his pen. I wish the Book all success.

**Bangladesh High Commission**
**His Excellency, Shamsher M. Chowdhury, BB**
**Colombo.**

R11422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை III

புயல் வாசித்த புல்லாங்குழல் என்ற கவிதைப் புத்தகத்தினை அறிமுகஞ் செய்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்· இப்புத்தகத்திலே உள்ளடக்கப் பட்ட கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பினை நான் வாசித்தபோது, கவிதையாசிரியரின் பங்காள தேசத்துடனான, உள்ளார்த்தமான உணர்வுகள் நெஞ் சத்தை தொடுமளவிற்கு பிரதிபலிப்பதனை என்னால் காணமுடிகிறது கடந்த சில தசாப்தங்களாக பங்கா ளத் தேசமும், அதன் மக்களும் சொல்லொணா இயற்கை அனர்த்தங்களுக்கு. அதிலும், சூறாவளி உருவாலான அழிவிற்கு ஆளாகி இருக்கின்றனர். வங்காளதேசத்தை வருடாவருடம் துயரில் ஆழ்த்தி வரும் இச்சூறாவளியின் அனர்த்தமானது அதன் அழிவுச் சுவட்டில் வாழ்கின்ற மக்களால் மட்டுமே நன்கு உணரக்கூடியதாக இருக்கின்றது இந்த இயற் கைச் சீற்றத்தின் விளைவுகளில் இருந்து மீட்சியடை யும் பொருட்டு, தேசம் மேற்கொண்டுவரும் மீட்பு நடவடிக்கைகள் சொல்லொணா

இங்கனமான தோற்றுவாய்களை எழுத்தாளர் தனது பேனாவால் வெளிக் கொணர்ந்துள்ளார்.

இப்புத்தகத்தின் வெற்றிக்கு எனது வாழ்த்துகள்

பங்காளதேஷ் உயர்ஸ்தானியர் - ஆலயம்
ஷம்ஸர் எம். கௌதூரி பீபீ
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை IV

இலக்கியப் படைப்புக்கள் கிழக்கில் இருந்தே அதிக மாக வருகின்றன. கிழக்கு முஸ்லீங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் காட்டிவரும் அக்கரை எம்மை பெருமிதம் அடையச் செய்கிறது.

இந்த வகையில் கவிஞர் அக்கரையூர் மு. றூகாவின் 'புயல் வாசித்த புல்லாங்குழல் !' எனும் புதுக்கவிதைத் தொகுதி, கிழக்கை மட்டுமன்றி முழு இலங்கையையும் பிரதி னித்துவப்படுத்தும் ஓர் நூல் என்றால் அது மிகை யாகாது. அந்தவகையில் இந் நன் முயற்சிக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து உழைக்கும் அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் கிழக்கு மாகாண சம்மேளனத்தை அகில இலங்கை இளம் எழுத்தாளர் சம்மேளனம் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை சமூகத்தில் மாற்றங்களைத் தோற்றுவிக்கும் ஓர் சக்திவாய்ந்த ஆயுதமாகும். அந்த வகையில், இளவயதான இக் கவி (இளை) ஞர் மு. றா கா தொடர்ந்தெச்சையாக காட்டிவரும் இலக்கியப் பணிகளுக்கு எங்கள் இயக்கம் சார்பாக முழு பங்க ளிப்புகளையும் தருவோம் என்று கூறிக்கொள்வதில் எமது சம்மேளனம் மன நிறைவடைகிறது.

இவரின் இப்பணி தொடர்ந்து பல இலக்கிய ஆயுதங்களை உற்பத்திசெய்து தரவேண்டுமென்று வேண்டுவதுடன், இவ்வாறான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்தும் அனைவருக் கும் எனதும், இயக்கத்தினரதும் வாழ்த்துக்களும், ஆசிகளும் என்றென்றும் உரித்தாகட்டும்.

அன்புடன்,

ரிஸா யூசுப்
( பொதுச் செயலாளர் )
1991 - 11 - 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

'கிழக்கில் வெளுக்காத வழக்கு' க்கு அடுத்ததாக மு. நூகா தரும் இரண்டாவது கவிதைத் தொகுதி, இப் ''புயல் வாசித்த புல்லாங்குழல்''

கவிஞர் அன்புடீன் அவர்களின் முகங்களுக்கு (1988) அடுத்ததாக முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் கிழக்கு மாகாணச் சம்மேளனம் வெளியிடும் இரண்டாவது கவிதைத் தொகுதியும் இதுவே.

சமுக நலன்சார்ந்த நடவடிக்கைகளில் கூடிய அக்கரை காட்டிவரும் வாலிப முன்னணி, ஆரோக்கிய சமுகத்தைக்காண விழைந்து, இலக்கியப் பணி புரியவும் எண்ணம் கொண்டுள்ளது என்பதனை எமது இரண்டாவது தொகுதி வெளியீடும், வழி மொழியும்.

ஆரோக்கியமான சமுகத்தை உருவாக்க சத்துணவு தான் கொடுக்க வேண்டும் என்று சொல்பவர்கள் உள்மனதை உணர்ச்சிகளைப்பற்றிய அக்கறையில்லாதவர்கள். மனித மனங்களை உழவும், நல் விதைகளைத் தூவவும் இலக்கியம் பயன்படும் என்பது எமது நம்பிக்கை. அந்தவகையில் நாம் இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கி வருகிறோம். கவிஞர் பாலமுனை பாறூக் அவர்களைத் தலைவராகக் கொண்ட அம்பாரை மாவட்ட முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் 'கலை, இலக்கியப் பிரிவு' மாதாந்த இலக்கியக் கூட்டங்களை, கவியரங்குகளை நடத்தி வருவதை இலக்கிய நெஞ்சங்கள் அறிந்தவையே

நூல் வெளியீட்டுத் துறையில் முன்பு, எழுபதுகளின் தலைமுறையிலிருந்து ஒரு கவிஞரின் ''முகங்களை'' உங்களுக்கு இனம் காட்டினோம்.

இப்போது -

எண்பதுக்குப் பிந்திய தலைமுறையிலிருந்து ஒரு 'புயலை', புல்லாங்குழலோடு உக்கள் வாசலுக்கு வர வைத்திருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்கவிதை பற்றிப் பேசுபவர்கள் படிமம், குறியீடு ஒத்திசைப்பு அனுபவ வெளிப்பாடு என்றென்றெல் லாம் கூறிக்கொள்ளத் தவறுவதில்லை.

'' படிம ஒப்பனையைப் பகட்டாக்கி
மேனியினை விகாரப் படுத்தி
விண்புரளி செய்யாமல் ;
புதுமையென ஆடையினை
முழுவதுமே களையாமல்,
அளவாய் அழகழகாய்
அணிந்து மணம் பூசி
வளைய வருகின்ற வனிதை

புதுக்கவி தை '' என்று கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள் மு. நூகாவின் முதலாவது கவிதைத் தொகுதி வெளியீட்டில் பாடிய கவிதை வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றன.

இந்த ஞாபகப் பரிமாற்றல்களோடு இளைய பாவலன் மு. நூகாவின் இதய வரிகளை — 'புயல் வாசித்த புல்லாங்குழலை !' உங்கள் முன் சமர்ப்பிக் கின்றோம்.

இப் புதுக்கவிதைக் கன்னி இளைய பாவலனின் இதயத் தோட்டணைந் தவளாய், வளைந்து வருகின் றாளா...? உங்களை வளைக்க வருகின்றாளா ? என்பதனை இனி நீங்கள்தான் சொல்லவேண்டும்.

உங்கள் ஆதரவு எங்கள் செயற்பாடுகளை மேலும் விரைவுபடுத்தும்.

- நன்றிகள் -

எம். ஐ. உதுமாலெவ்வை
கிழக்கு மாகாணப் பணிப்பாளர்
அ. இ. மு. லீ. வா. முன்னணி

145, பிராந்திய அலுவலகம்
அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பங்கள்
## திருத்திவைத்த விருப்பங்கள்

இரும்புப் பெட்டிகளில் பதுக்கி வைத்திருக்கும் கறுப்புப் பணம் மாதிரி சிலர் இதயப் பெட்டியிலும் சில வெறுப்புக்குணங்கள் இல்லாமல் இல்லை முதலாளிகளே ! எங்கே பார்க்கலாம் முதலில் த் திறங்கள் உங்கள் பணப் பெட்டிகளை... அப்பாடா, போதும் போதும் முதலில் மூடுங்கள். கறையான் அரித்து முடித்த காகித நோட்டுக்களை கட்டி வைத் திருப்பதில் என்ன பயன் கண்டீர்கள் ? வீசி விடுங்கள் முதலில் அவற்றை.

நண்பர்களே ! நீங்களும் கூடத்தான் திறங்களேன் பார்க்கலாம் உங்கள் மனப் பெட்டிகளை... அப்பாடா, என்ன அதிசயம் ! எண்ணங்கள் என்ன இரும்பு 'அயிற்றமோ '... இப்படித் துருப்பிடித்திருக்கிறதே. ஆம், குருதிகளும் கூட இரும்பின் ஒரு கூறுதானே ! அதோ அப் பணப்பெட்டி வீசப்படவுமில்லை ; நம் நண்பர்களின் மனப் பெட்டி பேசப்படவுமில்லை. இதோ... என் மனப் பெட்டி ! தேடிப்பிடித்து தெருவுக்கு இப்போதே இழுத்து வருகிறேன். அமைதி அமைதி.... உடைக்கத் தேவையில்லை உடைந்துதான் இருக்கிறது ! திறக்கத் தேவையில்லை திறந்துதான் இருக்கிறது !

□ □

கைகள் பிடித்துக் கொண்டிருக்கும் அங்கே, பத்திரி கையில் இதயம் துடித்துக்கொண்டிருக்கும். உதடுகள் உளறிக்கொண்டிருக்கும் அங்கே, வானொலி காத ருகே அலறிக்கொண்டிருக்கும். இரவுக்காற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரஉதடுகளோடு போட்டியிட்டுப் போட்டியிட்டு உலரமுடியாத எச்சில்களாக மரணப் படிக்கன்களுக்குள் அடிக்கடி உமிழப்படும் (இறுதியாக உமிழப்பட்ட) எங்கள் பங்காளதேசத்து கதை கேட்டு எங்கள் நாடே வெள்ளைக்கொடி பிடித்தது. நான் மட்டும் வெள்ளாடை தரித்தேன். விரித்தேன் என் டயரி களை நாட்குறிப்பு எழுதவல்ல; நாளைய குறிப் பெழுத!

□□

அன்று சதியின் சாட்சியத்தால் விடுதலைபெற்ற சமூக விரோதிகளுக்கெதிராக உசுப்பப்பட்ட என் பேனா, இன்று விதியின் சாட்சியத்தால் அடிக்கடி விடுதலைபெறும் ஒரு புயலுக்கெதிராக எதிர்வு கூற வந்திருக்கிறது.

அண்மையில் நடந்த சூறாவளியில் (1991, மே மாதம், 6ந் திகதி திங்கள் தினத்தில் தொடர்ந்து வீசிய சூறாவளி) இறந்த சுமார் 2 லட்சம் உயிர் களும், 1970ல் 1 லட்சம் உயிர்களும் இப்படியிப்படி யெல்லாம் இயற்கை அழிவுக்குள்ளாகும் நம் அயல் நேசமான பங்காளதேசத்தை கருவாக வைத்து இன் நூல் எழுதப்பட்டபோதிலும், என் வாசகர்களும், நேசகர்களும் வியர்வைக்குள் முற்றாக அகப்படக் கூடாதென்பதற்காக சுவை சேர்க்கும் சில கவிதை கள் பார்வைக்கு இங்கு விடப்படுகிறது.

□□

வாழ்க்கை முரசடிக்கும்போது கவிதை எப்படி புல்லாங்குழல் வாசிக்க முடியும்? அதனால்த்தான் என் தலைப் பிரசவத்திற்குக்கூட தடை விதித்திருக் றேன் தெரியுமா... ஆம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பழைய வரலாற்றைக் கொஞ்சம் பார்வைக்கு இழுத்துவருவது இவ்விடத்தில் உசிதமென்று நினைக்கிறேன்.

பனநுங்கு வண்டிகளும், பணம் சேர்க்கும் உண்டியலும் ஒரு உளவியல் பாதையுடன் உருமாறி முடிவதற்குள் மண்ணப்பம் சுடுவதற்கு மனசு விண்ணப்பம் இட்டது பாடப்புத்தகங்களெல்லாம் பாரப் புத்தகங்களாக படையெடுப்பு நடத்தியது.

காலத்தின் வீக்கத்தால் தாக்கப்பட்ட என்னிதயம், ஆக்கப்பட்ட அனைத்தையுமே நோக்கப்பட வேண்டுமென்று ஏக்கப்படத் தொடங்கியதால் பார்க்கப்பட்ட அனைத்தையும் நான் கவிதைகளாக மொழி பெயர்த்து தேக்கப்படுத்தி வைத்திருந்தேன்.

வளமான கவிதைகளை வடிகட்டிக் கொள்ளும் களமாக என் இதயத்தை நானே இயல்பாக்கிக் கொண்டிருந்தேன்.

இது என் 20 வயது அனுபவத்தில் எனக்காக நான் வகுத்துவைத்திருந்த சில மரபு வழிகளாகும்.

ஒரு கன்னியின் ஆசைகளை அவள் வயது நியாயப்படுத்துவது மாதிரி, என் முறன்பாடுகளெல்லாம் எனக்குள் உடன்பாடில்லாதபடி உடனுக்குடன் காலம் எனக்கு கடிதம் போட்டது.

அப்பன் பெயர் தெரியாத அழகிய குழந்தைகளின் அழுகுரல்களுக்கு முன்னால், கவிஞன் பெயர் தெரியாத கவிதைக் குழந்தைகள் முணுமுணுத்துவருவது என் செவிகளுக்கு அப்போதுதான் கவிகளாகக் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுத்தேன் எனக்கென்று புதிய மரபுகளை, தொகுத்தேன் என் பழைய கவிதைகளை ''ரெடிமெட் காதல்!''

என் இதய மேட்டின் அடிப்பாகத்தில் புதைந்து கிடந்த உண்டியலை அன்று புதைபொருள் ஆராய்ச்சியின்றியே புளக்கத்துக்குக் கொண்டு வந்தேன். ஆம்...

இலக்கியம் இவனுக்கு அறிமுகமான போதும், இலக்கியத்துக்கு நான் அறிமுகமாகாத அந்த 20 வயது இடைவெளிகளில் கிடைத்த ஒரு பட்டாசு கொளுத்தாத பண்டிகை. நான் எழுதி எழுதிக் கிழித்த; கிழித்துக் கிழித்து குவித்த என் சிறிய வார்த்தைகளின் சேமிப்புக் கணக்குகள் ஒரு நூலுருவில் இன்னும் தீர்க்கப்படாமல்ப் போனதற்கு, இன்றைய வடக்குக் கிழக்குப் பிரச்சினை ஒரு முக்கியமான காரணமெனலாம்.

உள்ளம் குடைசாய்ந்து போகும்போது உருவம் பிடிப்பதற்கு குடையொன்று தேவைதானா? வாழ்க்கை முரசடிக்கும்போது கவிதை எப்படி புல்லாங்குழல் வாசிக்க முடியும்?

என் சுற்றம் ரத்த வெள்ளத்தில் மூழ்கிக்கொண்டிருந்தது அப்போது. என்னால் முத்துக்குளிக்க முடியவில்லை; துப்பாக்கி ரவைகளைத்தான் தேடிக் குதிக்கமுடிந்தது! காதல்க் கவிதைபாட வாய்வரவில்லை, மோதல்க் கவிதைகளால் சாடத்தான் வாய்நீண்டது.

பாதிக்கப்பட்ட உயிர்களுக்கு என்னால் முழு உதவிகளும் செய்யமுடியாவிட்டாலும்; ஒரு முதலுதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முடிந்தது. அதுதான் அன்று என் முதல் நூலாக ''கிழக்கில் வெளுக்காத வழக்கு!'' சுடச்சுட வெளியிட முடிந்தது.

என் முதல் நூல் இந்தியாவில் அச்சமைக்கப்பட்டதால், என் மேற்பார்வைகளுக்கான தகுதியை இழந்தது, விமர்சகர்களின் மேலோட்டமான பார்வைகளுக்கெல்லாம் தகுதி பெற்றது.

நான் என்றும் விமர்சன விழுதுகளை நம்பி நிற்பவன். வரவேற்பவன். விமர்சனங்கள் அப்படித்தான் கொல்வதுபோல்தான் சொல்லும் காலப்போக்கில் கவிதைகள் தானே வெல்லும்!

இக் கவிஞன் என்னவோ காயப்படவுமில்லை, கவிதை சாயப்படவுமில்லை!

□□

பழைய என் முயற்சிகளின் பந்தல்களாக நின்று; என்னை இலக்கிய வீதிகளுக்கு இழுத்துவர ஈடுபட்ட, பாடுபட்ட பாத்திரங்களான... கல்ஹின்னை அல் - ஹாஜ் எஸ். எம். ஹனீபா (சட்டத்தரணி) அவர்களுக்கும், கடல்கடந்து மதிப்புரைகளால் என்னை கௌரவித்த புலவர் இ. பதுறுதீன் அவர்களுக்கும், வெளியீட்டில் சதாவும் பங்கேற்ற பிரபல எழுத்தாளர் அ. ஸ. அப்துஸ் ஸமது அவர்களுக்கும், என்றென்றும், எப்போதும் வரவேற்புத்தர வல்ல அன்பர் கவிஞர் மேமன்கவி அவர்களுக்கும், இலக்கிய ஆக்கங்களுக்கு ஊக்கம் தரவல்ல என் வாசகர்களுக்கும் என் இதயம் தோய்ந்த நன்றிகளை இந்நூலில் ஆய்ந்துகொள்வதில் அவசரப்படுகிறேன்.

□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் முதல் நூலில் அதிகமானவர்களின் குற்றச்சாட்டும் ; இந்நூலின் அன்பானவர்களின் பணிவுக் கூற்றும் 'நான் கண்டிப்பாக முன்னுரை எழுதவேண்டுமாம்' எப்படிச் சொல்லமுடியும் எனக்கு கவிதை மட்டும்தான் எழுதத்தெரியுமென்று? முதலில் காலம் நமக்கொரு முன்னுரை எழுதட்டும் பின்பு நாம் எழுதுவோம் காலத்துக்காக ஒரு முன்னுரையை, அதில்த்தானே காத்திரம் இருக்கிறது, அதற்காக நான் நிறைய காத்திருக்கவும் இருக்கிறது. என் வாழ்க்கைக் குறிப்பை நான் எழுதித்தர எனக்கு அப்படியென்ன வயசாகிப் போச்சி? இலக்கிய வெற்றிக் கம்பத்தை பற்றிப்பிடிப்பதென்ன லேசுப்பட்ட காரியமா... கவிஞனைவிட உயரமான ஒரு படிக்கட்டை முதலில் அவன் சொந்த நூல்களினால் அல்லவா இடவேண்டும்! பின்னர் அதில் அவன் தெளிவாக நடக்கவேண்டும் பின் காலம்தான் தீர்மானிக்கும் கம்பம் யாருக்கு ; ஜம்பம் யாருக்கென்று !

என் நேய விண்ணப்பங்களுக்காக நான் விண்ணப்பித்துக்கொண்டிருக்கும் இக் காகித வரிகள் முன்னுரையாகத் தோன்றாவிட்டாலும் என் முதலுரையாக வைத்துக்கொள்ளலாம்.

□□

கவிதை வரிகளை அண்மித்துக் கொண்டிருக்கும் என் கௌரவ வரிகளுக்கு இன்னும் ஒரு நன்றிப்பட்டியலை நங்கூரமாக்கும் தேவை இருக்கிறது. ஆம்...
இலக்கிய முயற்சியின் ஏற்றங்களெல்லாம் ஏமாற்றங்களென அர்த்தப்படுத்தி வைத்திருக்கும் அதிகமான தாய்மார்களுக்கு மத்தியில், ஏமாற்றங்கள்தான் வாழ்வின் ஏற்றங்களென உறுதியாக உச்சரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசிமேல் எனக்கு அகரம் சொல்லித்தந்த என் தாய்க்கு (எம். ஏ. ஹலிமா) இவ்விடத்தில் நினைவுகளால் ஒரு நினைவாலயம் அமைக்கின்றேன்.

என் முதல் பிரதியை மேத்தாவின் ' கண்ணீர்ப் பூக்களாக்கி ' அடகு நகைக்கடைவரை என்னை அம்பலப்படுத்தி விடாது, என் வாசற்படிகளில்வைத்து காகித நோட்டுக்களால் எனக்கு வரவேற்புத்தந்த என் தந்தைக்கு (எம். ஏ. சீ. முபாறக்) என் தோள்களை நான் காலியாக்கி வைத்திருக்கிறேன்.

அடுத்த படிகளாக... என் வெளியீட்டில் சதாவும் உழைத்துவரும் மரியாதைக்குரிய ஜனாப் ஏம். ஐ. உதுமாலெவ்வை (முஸ்லிம் லீக் கிழக்கு மாகாணப் பணிப்பாளர்) அவர்களுக்கும், அவரின் இயக்கத்திற்கும் அச்சமைப்பைப்பெற சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த **IPC** அச்சகத்தினர்களுக்கும், அதன் உரிமையாளரான **U. L. A.** கபூர் அவர்களுக்கும், என்னை எழுதும்படி தட்டித்தரும் என் அபிமானத்துக்குரிய சகோதரம் ஜனாப் **M. M.** அபுல்கலாம் (பாமிஸ் பணிப்பாளர்) அவர்களுக்கும், எப்போதும் எனக்காக தோள்கொடுக்கும் நண்பரும் ஓவியருமான ஏயெம் தாஜ் அவர்களுக்கும், அறிமுகக்குறிப்புகளால் என்னை அலங்கரித்துநிற்கும் அனுபவக் கவிஞர் அன்புடீன் அவர்களுக்கும், குறிப்பாக... ஆசியுரை நல்கிய அமைச்சர்களுக்கும், (அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்) அதிகாரிகளுக்கும் (ரிஸா யூசுப், பங்காளதேஷ் தூதுவர்) என் மனம் திறந்த நன்றிகள் என்றென்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ... நான் விலகி நிற்கிறேன் கால விமரிச னத்தின் கட்டை விரல்கள் கைநாட்டிட்டதுபோதும். இனி கலை விமர்சனத்தின் கல்வி விரல்கள் என் நூலுக்கு கைச்சாத்திடுகிறதா எங்கே !

134, எம்.எம்.எம்.வீ. றோட்
அக்கரைப்பற்று - 05
இலங்கை

அன்புடன்,
முூ. றூகா
1991 - 10 - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் மன்னன்தான் !

மண்ணுக்கு மன்னனாகிவிடும் மகத்துவங்களையெல்லாம் மறுதலித்துவிட்டு ஒரு பெண்ணுக்கு கண்ணனாகி விடுவதில் மட்டும் கனவு கண்டுகொண்டிருக்கும் காளை இவன்...

ஓ... ஆட்டம் காணும் அரசியல் சிம்மாசனத்தின் ஆபத்துக்களையெல்லாம் அறிந்துதானோ, அன்புச் சாசனமாக ஒரு பெண்ணின் இதய சிம்மாசனத்துக்காக ஏங்கிக் கிடக்கிறான் ?

*காதல் என்ற*
*கட்சியிலே*
*இதயம் என்ற*
*சின்னம் தாங்கி*
*அன்பு என்ற*
*ஓட்டுக்களை*
*அரைவாசிமேல்*
*பெற்றதனால்...*
*" அவள் " என்ற*
*நாட்டிற்கு*
*நானும் மன்னன்தான் !*

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோல்வி !

சாதாரண பஸ்வண்டியின் தாமதத்தில் கூட தன்னை அதிஷ்டமில்லாதவன் என அலட்டிக்கொள்ளும் மானிட மணிகளான காலத்தின் விழிகள் கண்காணிப்பிடட்டும் இக் கவிதைவரிகளை !

*சோதனை விசாரித்த*
*ஒருத்தனின்*
*சொந்த முகவரி.*

*பலகீனமும்*
*பலாத்காரமும்*
*கைகுலுக்கிக் கொண்ட*
*ஓர்*
*கதா பாத்திரம்.*

*மக்களை*
*மறதியிலிருந்து காக்க*
*கடவுள் தன்*
*பக்தர்களுக்கு வழங்கும்*
*கண்ணீர்க்*
*கைக்குட்டை.*

*அறிவாளிகளுக்கு*
*அதிகாரிகள் நடாத்தும்*
*வினாத்தாள் பரீட்சை !*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவமில்லாத
அறிஞன் ஏறும்
முதல் மேடை

சதாம்
புஸ்சுக்கு எழுதிய
கடைசிக் கடிதம்

கவிஞனுக்கும்
அவன்
கவிதைக்கும் இடையே
கனக்கும்
இடைவெளிகளின்
வீச்சு !

கைக் கரகோஷங்களுக்குள்
காணாமல் போகும்
சில
மலிவான மனசுகள்

அதிஸ்டமில்லாத
பரீட்சாத்தி வாசலில்
தபால்க்காரன் அடிக்கும்
மணி ஓசை

புதுக்கவிதையை
மறுதலித்து
மரபு வரைந்த
கண்டனக் கடிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைவாசியை எண்ணி
பொருட்களைப் பதுக்கும்
முதலாளிகளுக்கு எதிராக
அரசு கடைப்பிடிக்கும்
வழமைக்கு மாறான
ஓர்
பஜட் வாசிப்பு !

ஆட்சியாளரிடம்
குடிமக்கள் பெற்ற
வாக்குறுதிகள்

பொது மக்களோ
அடுத்த தேர்தலுக்காக
ஆயத்தப்படுத்தும்
வாக்குச் சாவடிகள்

இம்மையை நினைத்து
மறுமையை மறுதலிக்கும்
மானிடர் கூட்டம் !

அவலை நினைத்து
உரலை இடிக்கும்
எங்கள்
அயல்நாட்டு அரசாங்கம் !

அவ்வரசை நினைத்து
சிலர்
முரசுகளால் கடிக்க
நினைக்கும்
முன்னோடி முற்றுகைகள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணிடமிருந்து
ஓர் ஏழைப் பெண்
வாங்கும்
முதல் காகிதம் !

□

சரணடைந்த வீரர்களை
துப்பாக்கி முனைகளால்
தோற்க்கடிக்கச் செய்த
துர்ப்பாக்கிய
வெற்றி வாகை !

□

முனிவரின் தவத்தை
முறியடிப்பதற்காக
மோனிகள் எழுப்பிய
மோனச் சலங்கை !

□

முன்னால் வரும்
சோற்று முடிச்சுக்காக
பின்னால் வரஇருக்கும்
தடியடியை
தாமதித்து உணருபவன்

□

தோல்வியை
மறந்த நிலையில்
மாணிடம்
பறந்துசெல்லும்
வெற்றிப் பாதை
பார் ... பார் ...
சேர்...சேர் !

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி

சாதாரண பிரசவத்தில்கூட இயல்பாகக் கிடைத்து விடும் ஆண் குழந்தையைக்கூட வெற்றியென வாய்ப்பந்தல் விரிக்கும் வாயாடிகள்தான் எம்மில் எத்தனைபேர்? அத்தனை பேருக்கும் வாய்ப்பூட்டிடட்டும் இந்த வார்த்தை நோட்டுக்கள்

*தோல்வி வழங்கிய*
*முதல்*
*சிபார்சு*

□

*ஓர் சிந்தனையாளனுக்கு*
*அனுபவம் வரைந்த*
*வைர வரிகள்*

□

*ஆயிரம்*
*அறிவாளிகள் மத்தியில்*
*ஒரு முட்டாள் எடுக்கும்*
*திடீர்த் தீர்மானம் !*

□

*வளுவளுத்த*
*உறவை விட*
*வைரம் மிக்க*
*பிரிவு !*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதட்சணைக்காக
வாலிபம் வரைந்த
விண்ணப்பப் படிவம் !

□

திருமணச் சந்தையில்
மாப்பிள்ளை பொம்மைக்கு
பேதம் பேசலில்
தோற்றுப்போன
மாமனார் ஒருத்தர் !

□

தன்னை விரும்பும்
சீதையை விட
தான் விரும்பும்
பேதையை அடைவது !

□

வீழ்த்தியவன்
ஜாக்கிறதையாக
இல்லாததால்
வீழ்ந்தவன் தந்த
தாக்குதல் அடி !

□

அயோக்கியனுக்கு
அதிஸ்டம் அனுப்பி வைத்த
பாராட்டுக் கடிதம்

□

குற்றவாளி ஒருவனுக்கு
உயர் நீதிமன்றம்
அளித்த
அடுத்த அப்பில் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்கள் வாழும்
காலனித்துவ நாட்டில்
காவல் படையினர்
வைத்திருக்கும்
கால் விலங்குகள் !

□

நாளைய யுத்தத்தில்
ஜெயிப்பதற்காக
இன்றைய தத்தத்தில்
தோற்றுப்போகும்
இன்னொரு நெப்போலியன் !

□

அயோக்கியனை
மகனாகப் பெற்றெடுத்த
தகப்பனை விட
ஒன்றும் பெறாத
மலடன்

□

அரபிய நாட்டின்
உதைபிய உடன்படிக்கையின்
ஐந்தாவது வாசகம்
ஹிஜிரி எட்டில்
வாங்கித்தந்த
வயசான வாக்குமூலம் !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷனுக்கு
கழுத்தை நீட்டி
அரசனுக்கு
காலை நீட்டும்
பத்தினிப் பெண்ணை விட
மனைவியை
அடகுவைத்து
சூதாடித் தோற்கும்
சுத்தமான முயற்சி !

□

செட்டிக்கடை வைத்து
வட்டி உழைக்கும்
வயசாளிகளை விட
பெட்டிக்கடை வைத்து
குட்டி லாபம் பெறும்
பூ வியாபாரி .

□

வெற்றியை எதிர்பார்த்து
தோல்வியடையும்
முயற்சியில்
இன்னும் இன்னும்
தோற்றுப்போகாத ஒருவன்
நிச்சயம்...நிச்சயம்
ஜெயம் !...ஜெயம் !

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் உதவி

பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். எனக்கென்னமோ இதில் உடன்பாடில்லை ஏனென்றால்... இங்கு ஒருவனுக்கு, உணவு வந்தால்கூட மயக்கமே பறந்திருக்கிறதே.

இது நான் அனுபவத்தில் எழுதியதல்ல; அனுபவித்து எழுதியது!

*இந்த சமூகத்தில்தான்*
*எத்தனை*
*மலிந்த உடல்கள்*
*இவனைப்போல்*
*மெலிந்த உடல்கள்!*

□

*ஒளிகளுக்குத்தான்*
*உணவு தயாரிக்கும்*
*உரம் இருக்கிறதா?...*
*இந்த உருவம்*
*உள்ளெடுக்கும்*
*வளிகளுக்கு*
*உணவுகளைக்கூட அல்ல*
*கனவுகளையும்*
*தயாரிக்க முடிகிறதே!*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ ...
அவன் இப்போ
மயங்கிக் கிடக்கிறான்
வாருங்கள் அவனுக்கு
முதலுதவி செய்வோம் !

□

" ஐயோ சேர் ...
அவனுக்கு
நீர் கொடுக்காதீங்க
முதலில்
உணவு கொடுங்கள்
எழும்பட்டும் ! "

□

இந்த சமூகத்தில்தான்
எத்தனை
மலிந்த உடல்கள்
இவனைப்போல்
மெலிந்த உடல்கள் !

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலையும் அதன் லீலையும்

இயற்கை எழிலை ஓவியன் ஒருவன் வர்ணக் கலவைக்குள் ஓவியமாகத் தீட்டுவான். கவிஞனோ அதை வர்ணனைக் கலவையுடன் காவியமாகக் காட்டுவான்.

இங்கு நான் தத்துவக் கலப்பை கொண்டு, தீட்டாமலும் காட்டாமலும் உழுதிருக்கிறேன் ; தாட்டு !
எங்கே ... நீட்டலாம் இனி உங்கள் விமர்சன நோட்டுக்களை.

*என்ன அதிசயம் !*
*இந்த வானத்துக்குக் கூடவா*
*இரண்டு மாப்பிள்ளைகள்*

□

*இரவில் தன்*
*மனைவி வானத்துடன்*
*யார்*
*இல்லறம் நடத்தியவன்*
*என்பதை*
*பரிசீலிக்கத்தானோ*
*உன் கரங்களில்*
*இத்தனை*
*வெளிச்சக் கதிர்கள் ?*

□

*இரவெல்லாம்*
*நீ*
*மனசுக்குள் அழுதாலும்*
*உன்*
*சிவந்த விழிகளல்லவா*
*விடியலில் எமக்கு*
*காட்டிக்கொடுத்து விடுகிறது !*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனுடன் கொண்ட
சல்லாபத்தின் நெருசலிலே
வானம் வடித்த
வியர்வைத் துளிகளா
இந்தப் பனித்துளிகள் !

□

பத்தினி நிலத்தின்
இந்த
சித்தினித் துளிகளை
படியவிடாது
விரட்டி விடுவதற்காகவா
சூரியனே நீ
நேரகாலத்துடன்
படையடுத்து வருகிறாய் ?

□

ஏ ... சூரியனே ...
ஒரு உபதேசம் !
நீ
வருவதும் போவதும்
கிழக்கும் மேற்கும்
என்பதனால்
உன் ஆய்வுகள்
அர்த்தமிழக்கின்றன
திசைமாறி நட !
என்னையும்
புரிந்துகொள்வாய்
உண்மையும்
தெரிந்து கொள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் உனக்கு
உத்தரவிட்டார்கள்
நீ
முறையாக வருவதற்கு ?
காலை தன்
ஒவ்வொரு பிறந்த நாளையும்
கொண்டாடுவதற்கு
ஆதவன்
இப்படி ஒரு
வர்ண விளக்கை
தவணை முறையில்
தந்து விட்டுப்
போகிறானோ !

□

அத்தனை உயிர்களையும்
சோம்பல்
முறிக்க வைக்கும்
உன் விஜயம்
ஜெயமேதான்
என்றாலும் ...
நீ முறிக்கும் சோம்பலை
நீல வானத்தின்
நீளத்தையே
அளவெடுக்கவல்ல
மூலையில் இருக்கும் ஒரு
விடிவெள்ளி அல்லவா
எமக்கு
நீ வரும் முன்
சொல்லிவிட்டுத்திரும்பியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையே
நீ
காலையல்ல
கலை
எல்லா மனசுகளையும்
சிறைப்பிடிக்கும்
வலை !

□

இதோ ...
காலை மாலையை
வெற்றிகொள்ளப் போகிறது
இரவே ...
பகலில் உனக்கு
ஒரு தோல்வி
சூரியன் வரவால்
மறு தோல்வி !

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

பெண் குழந்தையை உயிருடன் குழி தோண்டிப் புதைத்த வரலாற்றை பின்நோக்கிப் பார்க்கும்போது, எங்கள் விழிகளுக்கூட வடிகான்கள் தேவைப்படுகின்றதல்லவா ? இப்போது …

என் கவிதையை முதலில் வாசித்துப்பாருங்கள் … பழைய வரலாற்றுக்கு ஒரு ' வெல்கம் ' பலகை நிறுத்தலாம் !

*மௌனங்களை*
*மனசுக்குள்*
*மறியல் செய்ததால்*
*சமூகம் இவளுக்கு*
*வாங்கித்ந்த பெயர்*

□

*தாலிகளை*
*புடைசூழ*
*வேலிகளாய் மாற்றிவிடும்*
*வேள்விகள் …*

□

*படுக்கை அறையில்க்கூட*
*தன் உணர்ச்சியை*
*வெளிப்படுத்த முடியாத*
*பத்தினிப் புத்திரிக்கு*
*உதாரண புருஷர் !*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடமைகளை
உயில் எழுதும்
உபன்னியாசனுக்கு எதிராக
உடல் மெய்களை
உயில் எழுதும்
கூட்டுக் குயில் !

□

வாழ்க்கை என்ற
சந்தைக்காக
குழந்தைச் சரக்குகளை
தவணை முறையில்
உற்பத்தி செய்யும்
சலவைத் தொழிற்சாலை !

□

அடுத்த குழந்தை
ஆணா பெண்ணா என
பரிசீலித்துப் பார்க்க
இரவு நாணயங்களால்
அடிக்கடி
சுண்டப்படும்
தெறி காசு !

□

குடும்பம் என்ற
அகராதியை
மனனம் செய்யப் பணித்ததனால்
'ஏன்' என்ற சொல்லுக்கு
'ஆம்' என்று
அர்த்தப்படுத்தி இருக்கும்
அதிசயமான அக(ரா)தி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிஷ்டமில்லாத
கருத்தரிப்பால்
கர்த்தனால் தெரியப்பட்டு
முதல் பிறப்பில்க்கூட
பெற்றோரின் எதிர்பார்ப்பை
ஏமாற்றம் செய்பவள் !

□

குள்ளமாக இருந்தாலும்
வள்ளமாக இருப்பவளும்
கருமையாக இருந்தாலும்
அருமையாக இருப்பவளும்
அசதியாக இருந்தாலும்
வசதியாக இருப்பவள் !

□

கனவுத் தொழிற்சாலையை
கண்ணுக்குள்
கட்டிக்கொண்டு
ஆறுதல் வார்த்தைகளை
அடிக்கடி
நெசவு செய்யும்
குடிசைத் தொழிலாழி !

□

பெருமூச்சுகளால்க்கூட
சூறாவளிகளை
உற்பத்தி செய்ய முடியாத
ஓர விழிகள் !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்ற
அடுப்பெரிய
வாலிப விரல்களால்
விறகுக்காக வெட்டப்படும்
மூங்கில் மரங்கள் !

□

கன்னி மூங்கில்களை
புல்லாங் குழல்களாக்கி
ஊத வரும்
ஒவ்வொருவரினதும்
வரதட்சனை ஓட்டைகளை
மறுதலிக்க முடியாமல்
முகாரி எழுப்பும்
புல்லாங்குழல்கள் !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களெல்லாம்
பெற்றோல்கள் ஆனதால்
மூன்றாவது சக்தியை
கண்டுபிடிக்கும்
அவசரத்தில்
தத்தம்
பேரன்களை அமர்த்தும்
சாரதித் தொழிலுக்குக்கூட
பணம் வசூலிக்கும்
பழக்கங்களை
வழக்கங்கள் ஆக்கியதனால்
ஓட பாதையிருந்தும்
ஓட்ட ஒரு ஆளில்லாமல்
வீட்டுடன்
அடைபட்டுக்கிடக்கும்
கன்னிக் கார்கள் !

☐

உணவுகளை
உற்பத்தி செய்யும்
விறகுக் கட்டையுடன்
தானும் ஒரு மட்டையாகி
வாழ்க்கை முடிவினிலும்
உடன் கட்டைஏறும்
உண்மையான
உத்தம புத்திரி !

☐ ☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்ப்பு சொல்லுங்கள்...

வெற்றிடங்களுக்குக்கூட வழிவிட முடியாத அளவுக்கு நெருக்கத்தின் எல்லைக்குள் நெருங்கிவர, இன்னொரு அண்டவெளியை அடைக்கலம் தேடும் இந்த ஜோடிகள்...... உதாரணத்துக்கு மட்டும் ஏனோ, இப் பிரபஞ்சத்தின் இரு துருவங்களை உருவகங்களாக்கி விடுகின்றனர் ?.........

*பெண்களில்லாத*
*நகரத்து*
*பஸ்வண்டியைப்போல்*
*உன்*
*நினைவுகளில் நான்*

□

*ஆண்களில்லாத*
*கிராமத்து*
*வயல் வெளிகளைப்போல்*
*என்*
*கனவுகளில் நீ*

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதவைகளின் விடியலில்.........

" இரவில் வாங்கினோம் இன்னும் விடியவில்லை "
இந்திய சுதந்திரம் இது ! இவர்கள் என்னவோ பகலில் தானே வாங்கினார்கள். இரவு வருவதற்கு முன் இருள் அல்லவா முறுவலித்து நிற்கிறது.
சுதந்திரம்தான்; படுக்கையறைக்கு மட்டும் !

*சவப்பெட்டி*
*ஆணிகளைப் போல்*
*இங்கு*
*மூட நம்பிக்கைகள்*
*முந்திக் கொண்டதனால்த்தானோ*
*சமூகத்தின் தராசின்*
*இன்னும் ஓட்டைவிழுந்திருக்கிறது.*

□

*ஒரு கன்னிப்பெண்*
*நிறுக்கப்படாமலேயே*
*ஒரு*
*தேசத்தின் பார்வையால்*
*வெறுக்கப்படுகிறாளே*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்...
ஆயுசு குறைந்த
துரதிஸ்ட சாலிகளுக்கு
அதிஸ்ட சாலியாக
இவள் தன்னை
தாலி என்ற வேலிக்குள்
தனிமைப்படுத்திக்கொண்டதனாலோ

□

ஏன் சமூகம்
தனது பரிசோதனைக் குளாயில்
ஒரு விதவையின்
கண்ணீரை
பரிசோதிப்பதில்லை ?

□

துரதிஷ்டை என்ற
வீழ்படிவை அல்லவா
பெண்ணின்
கீழ்படிவு என
நியாயப்படுத்துகிறது

□

ஏ...சமூகமே !
ஒரு விதவையின்
கூந்தலில் இருக்கும்
மலர்களை உங்களால்
மறுதலிக்க முடிவதெல்லாம்...
நாளை அவளின்
சமாதிகளின் மேல்
மலர் வளையங்களைவைத்து
அலங்கரிக்கத்தானோ ?

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் அவளுக்கு
நிரந்தரமாக
நெசவுசெய்து தந்திருக்கும்
அந்த
வெள்ளைத் துணிக்கும்
உங்கள்
பிணங்களுக்குப் போர்த்தும்
சவத் துணிக்கும்
என்னதான் வித்தியாசம் ?

□

ஒரு வாழ்வு என்பது
ஒல்லாந்தர் சொன்ன
கிழட்டுச் சட்டம்
மறுவாழ்வு என்பது
மனிதர்கள் இடும்
மகத்துவத் திட்டம் !

□

மனிதர்களே !
மன்னிப்புத் தருவதற்கு
மதங்கள் தேவையில்லை
முதலில் இவளுக்கு
மறுவாழ்வை அளியுங்கள்
□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞான விளக்கம்

விஞ்ஞான விதைகள் மனிதர்கள் மத்தியில் எதைத் தூவுகின்றன ? ஒழுக்க சூனியத்தையா ... ஓய்வான ஞானியத்தையா ...

வாலிப முழக்கங்களிவை விஞ்ஞான விளக்கங்களாகின்றன.

*இரும்பு துருப்பிடிக்க*
*ஒட்சிசனுடன்*
*நீர்தான் தேவை*
*ஆனால்*
*இதயம் துருப்பிடிக்க*
*பெண்ணுடன்*
*கண்ணிருந்தால் போதும் !*

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புயல் வாசித்த புல்லாங்குழல் !

'இயற்கை அழிவுக்குட்பட்டது' எனும் கருத்தை இறைவன் அடிக்கடி உலகுக்கு உதாரணம் காட்டிவரும் தேசம். ஆம் ... நம் அயல் நேசமான வங்காள தேசம்.

இறுதியாக 1991 - மே மாதம் 6ம் திகதி, திங்கள் தினத்தில் தொடர்ந்தெச்சையாக வீசிய சூறாவளிக்காக எழுதப்பட்டது இக் கவி.

சூறாவளி வீசியதோ வங்கத்தில் வீழ்ந்ததோ எங்கள் இதய அங்கத்தில் !

*சூறாவளியே ! ...*
*உனக்கென்ன வலியா*
*எங்கள் உயிர்களை*
*பலி எடுப்பதற்கு*

□

*மேயில் உனக்கு*
*இப்படி ஒரு*
*பேய் வரும் என்று*
*தெரிந்திருந்தால்*
*மாதக் கலண்டர்களை*
*நாங்கள்*
*மாற்றி அச்சடித்திருக்க*
*மாட்டோமா*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களில் உனக்கு
கண் குருடென்றால்
எங்கள் கண்களையாவது
தானம்
தந்திருப்போமே

ஓ ...
குள்ளக் காற்றே
அப்பாவி உள்ளத்தின்
கண்ணீர் வெள்ளத்தால்
இறைவன்கூட
கரைந்து விடுவான்
என நினைத்தா - நீ
வெள்ளத்துடன் வந்து
துள்ளத் தொடங்கினாய் ?

பன்னிரெண்டு தீவுகளை
பசியாறிய
ஏப்பத்தினாலா
கரை ஓரத்திலும்
உன்
கடைப்பார்வையை
வீசியிருந்தாய் ?

கடிகாரத்தின்
சின்ன முள்
தனது சிறிய முகப்பை
ஒன்பது முறை
சுத்தி வருவதற்குள்
ஒரு தேசத்தையே - நீ
சுற்றி வந்தாயாமே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தின் கீழ்
நேரத்தை நாங்கள்
வகுத்துப் பார்த்தபோதுதான்
தெரிய வந்தது
உன் வேகம்
எம்மாத்திரம் என்று

மணிக்கு நீ
145 மைல்
வேகத்தில் அன்றோ
ஜப்பானிய
ரயில் வேகத்தில்
வந்திருந்தாய் !

□

சூறாவளியே ! ...
உனக்கென்ன வலியா
எங்கள் உயிர்களை
பலி எடுப்பதற்கு

□

நீ சாதாரணமானவனா ...
உன் சின்ன வயசின்
சிரிப்பொலிகூட
78 களில்
இலங்கைக்கு
நெருப்புப் பொறியாக
அல்லவா
வந்து விழுந்தது

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதே உனது
துடி துடிப்பு
ஒரு கிழக்கு மாகாணத்தையே
உலுக்கிய தென்றற(ா)ல்
இப்போது நீ
எவளவு வளர்ந்திருப்பாய் ?

□

அடே பயலே
உன்னால் இன்று
எங்கள்
நாடே புயலே !

□

சூறாவளியே ! ...
உனக்கென்ன வலியா
எங்கள் உயிர்களை
பலி எடுப்பதற்கு

□

ஓ ... தென்றலே
உனை நாங்கள்
ஒரு தோட்டக்காரனுக்கும்
பூமரத்துக்கும் உள்ள
தொடர்பாக நினைத்திருந்தோம்
இன்றோ - நீ
ஒரு தோட்டக்காரனுக்கும்
வேட்டைக்காரனுக்கும்
வித்தியாசம் இல்லாதபடி
செய்து விட்டாயே !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி நாங்கள்
தோட்டங்கள்
இடுபவர்களைக்கூட
நோட்டமிட இருக்கிறோம்
ஏனென்றால் ...
அப்படித்தானே நீ
தோட்டங்களில் இருக்கும்
ஒரு கூட்டத்திற்கு மட்டும்
ஆட்டங்களைப்போட்டு
அயரவைத்துவிட்டு
ஒரு புயல்
பாட்டத்தையே நீ
அடுத்த கூட்டத்துக்கு
அனுப்பிவைத்து
மக்களை
வாட்டத்தில் ஆழ்த்துகிறாயே
ரத்த ஓட்டத்தில்
வீழ்த்துகிறாயே !

□

சூறாவளியே!
உனக்கென்ன வலியா
எங்கள் உயிர்களை
பலி எடுப்பதற்கு

ஓ ... ஒரு
சிறிய தேசத்தில்
இத்தனை
பெரிய கோஷங்களா ?

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய நேசங்களை எல்லாம்
வேகமாக வீசிவிட்டு
விவேகமாக வன்றோ
தென்றலே நீ
நில்லாமல்
நிமிர்ந்து சென்றாய் !

□

அலறியது
வானொலி மட்டுமல்ல
உளறியது
நாங்களும்தான்

□

தென்றலே ...
உனை நாங்கள்
எங்கள்
காதலிகளுக்கு அனுப்பும்
கைக்குட்டைகளிலே
தரமுயர்த்தி தரிசித்தோம்
இன்று எங்கள்
தாரத்தையே தகர்த்து
எங்கள் விழிகளில்
ஈரத்தையே
இறைத்துவிட்டாயே !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள்
புல்லாங் குழல்களை
வாசிப்பதற்காக
புளக்கத்துக்கு விட்டிருந்தோம்
இன்றோ உன்
இருமல் ஒலியால்
எங்கள்
புல்லாங்குழல்களை
சுவாசித்து விட்டாயே !

□

காற்றே - நீ
மரத்தை மட்டும்தான்
இடிப்பாய் என நாம்
நம்பி இருந்தோமே
இன்றோ எங்கள்
வரத்தையே
முறியடித்து விட்டாயே !

□

தென்றலே - நீ
இசையைத்தான்
படிப்பாய் என நாம்
காத்திருந்தோம்
நீ ரெம்பவும்
நடிப்பாய் என்பதை
இரண்டு லட்சம்
உயிர்களுக்குள்
முடித்துக் காட்டினாயே !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தோம் நாம்
பத்திரிகைகளில்
பக்கம் பக்கமாக
உன்
திருவிளையாடலை

□

என்ன செய்யலாம்
பகவான் இருந்திருந்தால்
உனக்கு
பணப் பொதியாவது
கிடைத்திருக்கும்
அவன்தானே இல்லையே.
அதனால்த்தானோ
உனக்கு
இரண்டு லட்சம்
பிணப் பொதிகள்
மிச்சம் !

□

சூறாவளியே ! ...
உனக்கென்ன வலியா
எங்கள் உயிர்களை
பலி எடுப்பதற்கு

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுவின்
இரண்டாம் பிறப்பை
பைபிள்கள்
பிரகடனப்படுத்தும் போது
ஏன் இறைவா
இந்த சூறாவளியின்
இரண்டாம் ஜனிப்பை
சுட்டிக்காட்ட - நீ
தவறி விட்டாய் ?

□

சூறாவளியே
உன் முதல் அவதாரம்
70 களில் ஆதாரம்
அடுத்த அவதாரத்தை
நீ
அறிவிக்காமலா
எங்கள்
இஸ்லாமியர் மத்தியில்
இறங்கி விட்டாய் !

□

குரானின் சூறாக்கள்
வழிகாட்டும் என்பார்கள்
அதனால்த்தானோ - நீ
சூறாவளியையே
எமக்கு
சுறுக்கு வழியாக
அனுப்பிவைத்தாய் போலும்

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூர் ஊதுவதற்கு
சுணங்கும் என்பதனாலா
குறுக்கு வழியாக
இந்த
சூறாவளியை
அறிமுகமாக்கினாய் ?

சூறாவளியே ! ...
உனக்கென்ன வலியா

ஓ ... வங்காள தேசமே
உன்னில் இருந்துதான்
எங்கள்
விரிகுடாவுக்கே
பெயர் வந்ததென்பார்கள்
இன்று எங்கள்
விழிகளில்
இன்னொரு குடாவையே
விதைத்து விட்டாயே !
உன் இந்த
விதவைக் கோலத்திற்கு
யார்தான் காரணம் ?

R11422
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்தான் காரணம்
என்றால்
ஆட்சியை மாற்றிடலாம்
ஆட்சிதான் காரணம்
என்றால்
ஆளையே மாற்றிடலாம்
இங்கு இறைவன்
சூட்சி அல்லவா
சுமாறாகத் தெரிகிறது
அவன் மாட்சிக்குத்தான்
எத்தனை சாட்சிகள்

□

இறைவா - உன்
சாட்சிகளை
சந்தைப்படுத்த
உன் சிந்தையில்
எங்கள்
வங்காள தேசம்தானா
சந்தையெனத் தெரிந்தது ?

□

ஓ ...
தேசப்படத்தில்
தெளிவாக
இல்லையே என்பதற்காகவா
எங்கள் நாட்டை
உலகுக்கு அடிக்கடி
உதாரணம் காட்டுகிறாய் ?

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் போதும்
உன் சோதனைகள்
நீ சாதனைகள் புரிய
இது நேரமல்ல.
இன்று தேசமெங்கும்
ஒரே விவாதனைகள்
சத்தியமாக இனி
மக்கள் மத்தியில்
உன்
போதனைகள்தான் !
போதுமா இறைவா
போதுமா ?

சூறாவளியே!
உனக்கென்ன வலியா...

புயலே நீயென்ன
குடிகாரப் பயலா ?
போகும் இடமெல்லாம்
ஆட்டம் போட்டு
கலாட்டாச்செய்கிறாயே !
யார் தந்தது
மது உனக்கு ?
ஓ ...
70 களில்
வங்கம் வாங்கித்தந்த
ஒரு லட்சம்
மனித போத்தல்களை
குடித்து முடித்த
வெறிதானோ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றே நீயென்ன
குலானை மேவும்
துரும்புச் சீட்டா...
உனைக் கண்டுபிடிக்க
'சிட்ட கொங்கில்' வைத்த
காற்றாடியைக்கூட
நீ
களவாடி விட்டாயாமே!

□

உனை நாங்கள்
சுவாசிக்கிறோம்
என்பதற்காக
இனியும் நாங்கள்
யோசிக்காமல் இருப்பதா?

□

யோசிக்கிறோம்
ஆசியாக் கண்டத்தில்
இருந்து
அண்டத்துக்கு எப்படி
ஆஜறாகலாம் என்று
யோசிக்கிறோம்

□

இதற்காகத்தான்
நாங்கள்
நுரையீரல்கள் இல்லாத
மனிதர்களை
படைக்கும் படி
வரம் கேட்டு இறைவனிடத்தில்
யாசிக்கிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூறாவளி
உற்பத்தி செய்த
அகதி முக(ா)ம்களே ...
என்ன செய்யலாம்
பாட்டுக்களைப் பாடித்தான்
எங்கள் மூட்டுக்களை
முறியடிக்க வேண்டிக்
கிடக்கிறது.
ஏனென்றால்...
நீங்கள்
காற்றுக்குப் பயந்துதான்
விழிக்கவேண்டி இருக்கிறது
நாங்களே இங்கு
வேட்டுக்குப் பயந்து
அன்றோ
ஒளிக்கவேண்டிக்
கிடக்கிறது !

□

எது எப்படியோ
காலம் தன்
கட்டை விரல்களால்
கண்டிப்பாக கைநாட்டிடும்
கண்டுகொள்ளலாம்
கண்ணே!
கண் கலங்காதே
மண்ணே !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூறாவளியே!
உனக்கென்ன வலியா ...

புயலே ...
நீ என்ன
ஹிட்லரின் பரம்பரையா
இல்லை
முசோலினின் முப்பாட்டனா
முறுவலித்தே - நீ
ஒரு தேசத்தையே
மோசம் செய்து
விட்டாயே !

□

பொறுத்திரு ...
இது உனக்கு
முதலாம்
உலக மகா யுத்தம்
அடுத்து உனக்கு
நிச்சயம் இருக்கிறது
இரண்டாம்
உலக மகா யுத்தம் !
ஏனென்றால் ...
நீ
உயிரைத்தான் குடிப்பாய்
ஆனால்
நெருப்போ
ஒரு நாள்
உனைப் பிடிக்கும்
தெரிந்துகொள் !

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்(ன) தேவை

இங்கு யார்தான் தேவையில்லாமல் இருக்கிறார்கள்?
தேவைதான் ; பணம் அச்சடிக்கும் அச்சியந்திரங்களும் கூடத்தான்.
பாவம் இவனுக்கு ...
தேவைப்படுவதைப் பார்த்திர்களா ...

*இப்போது என்னிடத்தில்*
*உள்ளகுறை சிக்கல்*
*காதலியின் இல்லமோ*
*இருப்பதே செக்கல் !*

□

*கதைப்பதிலும் எனக்கினிமேல்*
*இல்லையே விக்கல்*
*கால் நடையாய் நடந்ததிலே*
*எனக்கின்று குக்கல் !*

□

*ஊரார்கள் எனைப்பார்த்து*
*அடிக்கின்றனர் நக்கல்*
*உண்மையிலே அது எனக்கு*
*அடிமனதில் தாக்கல் !*

*ஆதலினால் எனக்கின்று*
*தேவை ஒரு சைக்கல் !*

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்(ன) லாபம்

இற்றைக்கு மூன்று வருடங்களிருக்கலாம் என் நண்பி ஒருத்தி '' உங்களால்க்கூட ஒரு மரபுக்கவிதையை எதுகை மோனையுடன் உற்பத்திசெய்ய முடியுமா ? '' என்று எனைக் கேலி செய்தபோது,
என் பேனா கிறுக்கிய கிறுக்கல்களிவை.

என்(ன) லாபம், என்(ன) தேவை.

*உலகத்தில் இப்போது*
*எங்குமே பஞ்சம்*
*ஊரவர் வார்த்தைகளோ*
*என்றுமே வஞ்சம்*

□

*உலகை ஆள்வதில்*
*எனக்குமுண்டு நெஞ்சும்*
*உண்மையிலே என்னிடத்தில்*
*இல்லையே லஞ்சம் !*

□

*ஆதலால் நாணின்று*
*தேடுகிறேன் நஞ்சும்*
*அதுகூட என்னிடத்தில்*
*இருப்பதே கொஞ்சம் !*

*இறுதியாக என்னிடத்தில்*
*கண்ணீரொன்றே தஞ்சம் !*

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கரைப்பற்று

நான் பிறந்த கிராமம் இது. இப்போதெல்லாம் நிறைய நகர வாடை அடிக்கிறது. கருங்கொடித்தீவு என்று செல்லமாக அழைத்தார்கள் அப்போது.

இப்போது அக்கரைப்பற்று என்று அகரம் சேர்த்திருக்கிறார்கள் அவளவுதான்.

*யார் வரவை*
*எதிர்பார்த்து*
*எங்கள் வீதிகளுக்கு*
*பந்தல் முளைத்திருக்கிறது*
*இந்த*
*வாகை மரங்களால்?*

□

*என்*
*மூக்குத் துவாரங்களில்*
*வளிகள் வருவதற்கு முன்*
*சளிகள் வந்து நின்று*
*எத்தனை ஜொலிகளை*
*எனக்கு*
*அறிமுகமாக்கிய*
*தூரத்து இடைவேளையது*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேட விழாக்களில்
உலாக் கோலம்
போட்டிருப்பது
பெண்களின் நாவுகளில்
சொல்லுகளும்
ஆண்களின் கைகளில்
சாயமிடப்பட்ட
பொல்லுகளும் அல்லவா
அப்போது ...

□

அபாய கும்பல்களின்
ஆற்றாமைக்கு உட்படும்போது
மக்கள்
எரிமலைபோல் எழுந்தாலும்
நிதானமாக
உருகவைக்கும்
சில ' குத்துபா '
உபதேசங்கள் அல்லவா
வாரா வாரம்
இசைக்கிறது
இப்போது ...

□

கிழக்கிலிருந்து மேற்காக
ஏறுவரிசை கொள்ளும்
ஆறு எண்களுடன்
ஊரின் குறிச்சிப் பட்டியல்
அம்பலமாகிறது

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் எழிலை
கிராமியப்படுத்தி இருக்கும்
இரண்டு
வித்தியாச துருவங்கள்
ஒன்று
மேற்துருவம் ( குடியிருப்பு )
ஒன்று
கீழ்த்துருவம் ( தோட்டம் )

□

வறுமையின் முகங்களை
அம்பலப்படுத்த
முகவரி இடுகிறது
ஊரின்
எல்லையில் இருக்கும்
ஓர்
நூறாணியாத் தோட்டம்

□

எப்போதோ ஒருநாள்
வாழ்க்கையில்
ஜெயித்த குற்றத்துக்காக
வறுமை குடிபெயர்த்திய
வயசாளிகளின்
குடியேற்ற நிலமது

□

கிழக்கு மூலையோ
வெளுக்காத மாலை
இளகவைத்த ஓலைகளுடன்
காலை
கைகள் பெறும் வேலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைகள் வாலாட்டும்போது
பசித்த குழந்தையை
தாலாட்டுப் பாடி
தூங்க வைக்கும்
தாய்மார் எடுக்கும்
சிக்கனமான
தற்கொலை முயற்சியை
பாராட்டத்தானோ
அந்த மூலையில்
முளைத்திருக்கும்
நீலக் கடல்
அடிக்கடி
தலையாட்டிக் கொள்கிறது.

□

சில வேளைகளில்
அந்த மூலைகளில்
சில
குடிசை விளக்குகள்
குறுட்டுப் போவதுகூட
திருட்டுப் போய் விடுகிறதாமே.

□

அப்போதெல்லாம் எங்கள்
ஊருக்கு இருந்த
கிராமியம்
இப்போதெல்லாம்
நகர்ந்து
நரகமாகி விட்டதே!
இல்லையில்லை
நகரமாகி விட்டது

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் ஒதுக்கத்திலே
சமூகத்தின் குப்பங்களை
சகிக்க முடியாமல்
ஒரு
முறாவடை நதி
கடலில் விழுந்து
தற்கொலை புரிகிறது.

□

ஊரின் சனத்தொகையை
வரையறுத்துக் காட்ட
ஒவ்வொரு அந்தியிலும்
படம்பிடித்துத் தருகிறது
தாய் வீதியான
பட்டினப் பள்ளி முன்பிருக்கும்
ஓர்
தார் வீதி

□

தெற்கே ...
முஸ்லிங்களைப் பிரிக்கும்
அபாய போட்டுக்களை
சுமந்த
முன் கம்பங்கள்

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதெல்லாம்
நாங்கள்
ஒளித்து விளையாடும்
வீதியது
இப்பேதெல்லாம்
ஊரே
விழித்து நடமாடும்
பீதியது.

□

அதே வீதியில்தான்
இன்னுமொரு
சேதி இருக்கிறது
ஆம்
மனசுகளை அடைத்தனுப்பும்
காகிதத் துண்டுகளைக் கூட
குண்டுகள்
என நினைத்தா
உடைத்தனுப்புகிறார்கள்
இப்போது ?
தபால் இலாகா ஒன்றும்
தடை செய்யவில்லை
எங்கள்
தலைமை இலாகா
ஊருக்கு
விடை சொல்கிறது.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னிய மந்தைகள்
மலிந்ததனாலோ
சிந்தைகள் கொண்ட
எங்கள்
தந்தைகள் உடல்கள்
கன்னி வெடிகளுக்குள்
அடிக்கடி
கந்தைகளாகின்றன
ஊர்ச்
சந்தையின் ஓரம் !

□

ஓ ... வாசிகசாலையே
இந்த தேசத்தின்
விழிகளில்
விழிப்புக் குறிகளை
எனைப் பார்த்து
வியாபிக்க வைத்தவளே
உன் வாசகர்களை
வேஷகர்களிடமிருந்து
காப்பதற்குத்தானோ
உன் இடத்தையே
நீ
விட்டுத் தந்தாய்
ஓர்
பொலிஸ் நிலையத்துக்கு ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைகள் நாலல்ல
இன்னுமிருக்கிறது
என்பதை
நிரூபிக்கும் அவசரத்தில்
அரச துருப்புக்கள்
ஊரின்
சாலைகளில்க்கூட
தங்கள்
வேலைகளை
நிறுவி விடுகின்றனர்.

□

உணர்ச்சிகளை மட்டும்
பந்தி வைப்பதற்காக
தொந்தி விழுந்த
சில
சுவரொட்டிச் சுவர்கள்

□

சில்லறையாக
பாவங்களை செய்துவிட்டு
ஒட்டு மொத்தமாக
அழித்து விடுவதற்கு
ஊர்
எல்லையில் ஓர்
பெரிய பள்ளிவாசல்.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கே
சிங்கள மக்களை
முஸ்லீங்களுடன் இணைக்கும்
ஒரு
பட்டியடிப்பிட்டி
பழைய பாலம்.

□

வழங்களை எங்கோ
தொலைத்து விட்டு
இறைவனிடத்தில்
வரங் கேட்டு
இரங்கல்பா நடத்தி
வடிகால்களை தேடும்
சில
பள்ளிப் பூமிகள்!

□

இதோ ...
எனக்கு
அடியும் அறிவும் தந்த
கலவன் பாடசாலை
'அல்முனவ்வறா வித்தியாலயம்'
என்ற
பெயர் பலகையை
மார்பில் சுமந்தபடி
மௌனம் சாதிக்கிறது.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ ...
எனக்கு
அறிவுப்பால் மட்டும்
ஊட்டி விட்ட
செவிலித்தாயான
' முஸ்லீம் மத்திய கல்லூரி '
இன்னும் கூட
அவள்
இளமையுடன் இருப்பதனால்
நாணத்தால்
தன் முகங்களை
முந்தானை கொண்டு
சுற்றி
மறைத்துக் கொள்கிறாள்.

□

மூத்த தலைவர்களின்
அரசியல் வார்த்தைகளால்
வகுக்கப்பட்டு
வயசுக்கு வந்ததால்
நாளுக்கு நாள்
நாகரீகத்திற்குட்பட்டு
திருத்தத்திற்குள்ளாகும்
ஒரு
புதுப்பள்ளி.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் எல்லையில்
செல்லாத சில்லறைகளை
சேமிப்பதற்காக
மையவாடி ஒன்று
வெல்கம் பலகையை
முன் நிறுத்தி
லயன்ஸ் கழகத்துடன்
கைகுலுக்கிக் கொள்கிறது.

□

வடக்கே ...
பரீட்சைகளுக்கு வரும்
சித்திரப் பேப்பர்களில்
இயற்கைக் காட்சி பற்றி
பரீட்சாத்தி விரல்கள்
கோலம் போடுவதற்கு
முன்பே
ஒவ்வொரு மனசுகளிலும்
பாலம் போட்டுவிடும்
ஓர்
நிழல் பரப்பு.
அதுதான் எங்கள்
பாட்டாளிகளின்
கண்ணீர் புடைசூழ
மூழ்காமல் தத்தளிக்கும்
முல்லைத்தீவு.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் மத்தியில்
மரணத்தை உறுதிப்படுத்த
கடற் காற்றை மறைக்கும்
ஓர் நடமாடும்
வைத்தியசாலை.

□

முறைப்பாடுகளை மட்டும்
பரிசீலனை செய்வதற்கு
ஊரின் மத்தியில் ஓர்
உதவி அரசியல் அதிபர் பிரிவு.

□

அதே கட்டிடத்தில் ...
எரியாத அடுப்புக்கள்
எத்தனை என்பதை
பட்டியல்
போட்டுத் தரும்
ஓர்
கிராமாட்சி மன்றம்.

□

நாட்டின் ஒதுக்கங்களில்
ஒதுக்கப் பட்டதனால்தானோ
எங்களூரின்
மத்தியில் போய்
அமைத்துத் தந்திருக்கிறார்கள்
இந்த
அகதிகளின் முகங்களுக்காக
சில முகாம்களை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் அதிகாரத்தை
பக்தர்கள் எடுத்ததனால்
ஆண்டவனின் அடியார்களுக்கு
இங்கு
அநியாயம்
ஆம்
அகதி முகாம் வடிவில்
ஆதாரமாகிறது.

□

அதே ஆதாரத்தில்
இப்போது ஒரு
புதிய அவதாரம்
ஆம் ...
ஓர்
பொலிஸ் நிலைய
பெயர்ப் பலகை
வேகமாக வீசப்பட்டு
மாறி வருவதற்குள்
மாறி வந்திருக்கிறது
எங்களூர்
எழுவட்டுவான் விளையாட்டரங்கு.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக
எங்களூர்
ரசிகர்களுக்கு
ஓர்
எச்சரிக்கை !
வழமை போல
மைதான வீரர்களின்
அடிகளில்
கண் வைப்பதைவிட
அன்னிய தீவிரர்களின்
கன்னி வெடிகளில்
சிறிது
கவனத்தைத் திருப்புங்கள்
ஏனென்றால்
எங்களூர்
மதூதிகளைவிட
இங்குதானே
மனிதர்கள் ஜாஸ்தி !

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியாயம் கேட்கிறேன் ...

குழந்தையின் வாக்கு மூலமும் குமரியின் கண்ணீரும் சமூகத்தால் எப்போதும் மறுதலிக்கப்பட்டிருக்கிறதா ... ஏழைகளும் கோழைகளும் எங்கள் காளைகளாக இருந் தாலும் சமூகத்தின் தராசு என்னவோ தடுமாறத்தான் செய்கிறது.

*பெண்களெல்லாம் இப்படித்தான்*
*அவள் முந்தி*
*வாய் திறந்தால்*
*எங்கள் கைகளில்*
*டாட்டாக்கள்*
*அவன் முந்தி*
*வாய் திறந்தால்*
*உங்கள் கைகளில்*
*பாட்டாக்கள் !*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாருக்கு நோன்பு ?

இப்போதெல்லாம் சாதாரண வாய்த்தாக்கல்களுக்குக் கூட பட்டினி கிடக்க பழக்கப்பட்டு விட்டன எங்கள் சமூக வயிறுகள். இதில் நோன்பு வேறு. எனக்கென்னமோ ஒரு சந்தேகம்... இவர்கள் ஆண்டவனுடனும் கோபித்துக் கொண்டுதானோ புனித நோன்பைக்கூட இப்படி அமுல்படுத்துகிறார்கள் !

*எமது தேசத்தின்*
*குடும்ப கைதிகளின்*
*கண்ணீர்த் துளிகள்கூட*
*ஜன்னல்க் கம்பிகளை*
*துருப்பிடிக்க வைக்கும்போது ...*
*செருப்பிடித்த இதயங்கள்*
*இவை*
*நோன்பு பிடிப்பதால்*
*மட்டுமென்ன*
*துலங்கவா போகிறது ?*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசித்திருப்பதால்
மட்டும்
பாவச் சுமை
களைவதென்றால் ...
புசித்திருக்கும்
சீமான்களின்
புண்ணியங்களை
எங்குதான்
வரவு வைப்பதோ ?

□

பத்தினியாக
இருப்பதனால்
பட்டினியாக
வாழும் எங்கள்
வறுமைக் கோட்டு
வயசாளிகளுக்கும்
நோன்பு ஒரு
பாடம் என்றால் ...

□

சித்தினியாக
வாழ்ந்து கொண்டு
பட்டினியாக மட்டும்
மட்டுமிங்கே
நோன்பு நோற்கும்
நேசர்களுக்கும்
நோன்பு ஒரு
வேடம் தானே ?

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தித்துப் பாருங்கள் !

நகர வீதிகளின் நாகரீக மாற்றத்தால் விழிகள்கூட இன்று விரதமெடுத்துக் கொண்டன.

எப்படித் தெரியுமா ... '' மூக்குத் துவாரங்களெல்லாம் சுவாசத் தொழிற்பாட்டுடன் நின்றுவிட வேண்டும் பகுதி வேலைகளான

மோப்பம் பிடிப்பவைகளை எல்லாம் நாங்களே பார்த்துக் கொள்கிறோம் !'' வேடிக்கைதான்.

*நகர வாடையை*
*மோப்பம் பிடிப்பது*
*எப்போதும்*
*மூக்குகளல்ல*
*கண்கள்தான்*
*ஏனென்றால் ...*
*விழிகளுக்குத்தானே*
*அறைகுறை ஆடையை*
*அடையாளம்காண முடிகிறது !*

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த விண்ணப்பம்

இரண்டு நேச மனசுகள் சேரத்துடிக்கின்றன இடை யிலோ, காதல் ரணைகளால் காயப்பட்ட பெண்ணொ ருத்தி தன் சகோதரி முன் தடைபோடுகின்றாள். ஒரு சோடி மனசுகள் அவை ஒரு கோடி வார்த்தைகளால் நடை போடுகின்றது.

*குருதியிலே*
*கண்ணீர் கலந்து*
*என் இதயத்தையே*
*தாள்களாக்கி*
*சுருதியிலே முகாரி ராகம்*
*சுமாறாக ஒலித்தாலும் ...*

□

*ஒரு புறத்தில் நபிபெருமானையும்*
*மறு புறத்தில் ஏசுபுரானையும்*
*கையெழுத்து இடவைத்து*
*வானவர் மூலமொரு*
*மடல்தான் வரைந்தாலும் ...*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஆற்றாமை
வார்த்தைகட்கு
தாங்கள்
அபிமான வார்த்தைகளோ
அர்த்தம் பெறப்போவதில்லை !

ஏனென்றால் ...
தாங்கள்
வாழ்க்கை என்ற
பல்கலைக் கழகத்தில்
காதலென்ற பிரிவினிலே
பீ. ஏ பட்டம்தான்
முடித்தவர்கள்
ஆனால் ; நீயோ
தோல்வியென்ற பாடத்திலே
எம். ஏ முடிச்சவளாச்சே !

□

கேவலம்
நாங்கள் இப்போது
கேட்டு
அடம்பிடித்துக் கொண்டிருப்பது
காதலென்ற பாடத்தில்
பீ. ஏ பட்டம்
வாங்குவதைக்கூட அல்ல
காதலென்ற பாடம்
எடுப்பதைப்பற்றித்தானே !

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லறைக் காதல்

ஒரு பதினாறு வயதுக் கன்னியின் தலைப் பிரசவம் எப்படியிருக்கும் ? அந்த அளவுக்கு களைப்பையும் கசப்பையும் வாங்கித்,தந்தது ...

எப்போதோ நான் எழுதிக் கிழித்த முதல் கவிதை இது ! பொறுமையிருந்தால் இல்லையில்லை பொறுப்பிருந்தால் எவராவது படிக்கலாம் ஏனென்றால் பாடுவது மழலையாச்சே !

*வேண்டுமானால்*
*குற்றவாளி வந்து*
*தன் கவலையை*
*கூறி அழலாம்*
*நீதவானே*
*நீங்கள் அழலாமா*
*ஊருக்கு நீதிசொல்பவர்*
*ஒருத்திக்காக அழலாமா ?*

□

*நான் வேண்டுமானால்*
*அழலாம்*
*உங்களை நினைத்து*
*அதிலும் நான்*
*பெண்ணல்லவா !*
*ஆண் மகன்*
*நீங்கள் அழலாமா*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழாதே கண்ணா
என் நீதிமன்றம்
நீண்ட
இடைவெளிகளுக்குப்பின்
நீதி வழங்கியிருக்கிறது!
அழாதே கண்ணா

□

ஆம் ...
என் நீதிமன்றம்
இதய அறைக்குள்
இல்லை யில்லை
என்
இதய சிறைக்குள்
உங்களை
கைது செய்ய
உத்தரவிட்டிருக்கிறது.
என்
இதயத்தைத் திருடியதற்காக
அதுவும்
சாதாரண கைதியாகவல்ல
ஆயுள் கைதியாக!

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி அந்த
ஆண்டவனே வந்து நின்று
உங்களை
ஜாமிலில் கேட்டாலும்
கொடுக்கமாட்டேன்
என்
உயிர் உள்ளவரை !

அவனிடமும் நான்
சொல்லப் போவது இதுதான்
முதலில் என்
ஆத்மாவுக்கு சமாதிகட்டு
பின்பு
கை கூடலாம்
எங்கள் காதல்
கல்லறையிலாவது !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாசமான விபச்சாரி !

எமது சமூக சந்தையிலே
பணம் வாங்கி பள்ளி கொள்ளும் பத்தினிப் பெண்களிடையே, பிணம் கேட்டு அடம்பிடிக்கும் ஓர் சித்தினிப் பெண்ணை நான் லாவகமாக வரவேற்கிறேன் !

*மரணம் என்பது*
*வித்தியாசமான விபச்சாரி*
*ஆண் தேவை என்றால்*
*பெண்ணாக மாறுவாள்*
*பெண் தேவை என்றால்*
*ஆணாக சேருவாள்*
*ஆனால் ...*
*பணம் வாங்க*
*மறுப்பாள்*
*பிணம் கேட்டு*
*அறுப்பாள் !*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்(டி) ஐடியா !

நோயாளிக்காக வாதாடுபவன் ? வைத்தியன்
நோய்க்காக வாதாடுபவன் ? மருத்துவம்
குற்றவாளிக்காக வாதாடுபவன் ? வக்கீல்
குற்றத்திற்காக வாதாடுபவன் ? சட்டம்
இங்கு, புகைப்பவர்க்காக வாதாடுபவன் ? உபதேசி
புகைக்காக வாதாடுபவன் ... ? வாசகா நீ யோசி !

*ஓ ... சிகரட்டே*
*நீ என்ன மாத்திரையா*
*சாப்பாட்டுக்கு பின்*
*உனை இவர்கள்*
*இப்படிக் குடிக்கிறார்களே*

□

*ம் ...*
*வை நெருப்பை*
*பிரித்தானிய பணப்பைகள்*
*எவ்வளவு தூரம்*
*நிரம்பி இருக்கிறது பார்ப்போம்.*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை வகையான
உணவுகளுக்கு எல்லாம்
நீ பெருந்தகை
உதடுகளில்
உட்கார்ந்து விட்டால்
உண்மையில்
உள்ளங்களுக்கு அன்றோ
நீ பகை!

□

அரச எச்சரிக்கைகள்
உன் முகத்தில்
அச்சடிக்கப்பட்டிருந்தும்
உச்சரித்துக் கொள்வதேனோ
உலகம் உன்பால்

□

ஓ ... நீ
பெண்பால் என்பதனாலோ!

நீ உடுத்திருக்கும்
வெள்ளை ஆடையால்
உனை
விதவை என
இனம் கண்டதனாலோ
வழமை போலவே
இந்த மனிதர்களின்
எரிக்கும் முயற்சி
முடியாமல் தொடர்கிறது?

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ ... சிகரட்டே
முதலில் உன்
நிறத்தை மாத்து
தரத்தைப் பார்த்தாவது
இவர்கள் தங்கள்
கரத்தை காலியாக்கட்டும்

☐

ஓ ... சிகரட்டே
ஒரு சின்ன சீகரட்
இவர்கள் உனை
பிடித்து வைத்திருப்பதோ
வடித்து தரிப்பதற்கல்ல
எரித்து முடிப்பதற்கு
தெரிந்து கொள் !

☐

அழுவதற்கு நீ
ஆயத்தப்படுவது
தெரிந்துதானா
இவர்கள் உன்
விழிகளிலேயே
அக்கினியை விதைக்கிறார்கள் ?

☐

ஐயோ ... உன்
மனசு பத்தித்தானா
இத்தனை புகை மண்டலம் ?

பரவாயில்லை
முதலில் உன்
புளக்கத்தை சாத்து
பின்
மக்கள் தன்
பழக்கத்தை மாத்துவார்கள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் மானிகள் !

என் முதல் நூலில் விடுபட்ட கவிதை இது பரவா யில்லை, இப்போது படித்துப் பாருங்கள். ஆச்சரியப் படாதீர்கள், எங்கள் அகதி முகாம்கள் அப்படித்தான் ; கல்லால்தான் கட்டப்பட்டிருக்கும் !

*எம் தேசத்தின்*
*மழை வீழ்ச்சியை*
*அழந்து காட்டும் படிமம்*
*மழைமாணி*
*என்றாலும்*
*அதே தேசத்தின்*
*மனித வீழ்ச்சியை*
*அளந்து காட்டும்*
*படிமந்தான்*
*எங்களூர்*
*அகதி முகாம்கள் !*

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதவறிய அத்தானுக்கு ...

பழைய நட்பின் பழக்கதோஷம் காரணமாக இரண்டு குடும்பங்களுக்கிடையில் சிநேகங்களால் ஒரு மௌன சம்மந்தம் சம்மதமாகிறது ;
சேரும் இள உள்ளங்கள் உடன்பாட்டிற்கு
வரும் முன்னர் ! ஆம் ...
சேர்ந்து விட்டார்கள்தான். அவள் ...
இன்னொரு அத்தானிடம். அவன் ...
தனிமை தாடியுடன் !

*அன்பின் அன்பரே*
*நலம்*
*நலம் காண நாட்டம்*
*வேதனையின் வெளிச்சத்தில்*
*தூசு தட்டிக்கொண்டிருக்கும்*
*உங்க நினைவுகளில்*
*இதோ ...*

□

*நான்கு மடல்கள்*
*நான் வரைந்து*
*தோற்றுப் போய் விட்ட*
*சாயல்கள் கூடவா*
*எனை இன்னும்*
*இனங் காட்ட மறுக்கின்றன ?*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் போதும்
உங்க நினைவுகளெல்லாம்
இவனை இனங்காண்பதில்
சுற்றி அலைந்ததே போதும்
நேரிடையாகவே
நெருங்கி வருகிறேன்

□

நான்தான் றமேஷ்
அன்றைய உங்கள்
அக்கரையூரின் அகரம்
அடிக்கடி
நீங்க சொல்லும்
எவரெஸ்ட் சிகரம்
இன்னும் எட்டவில்லையா
கிட்ட வாங்க காதுக்குள்ளே
ரமேஷாவின் தம்பி !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு தூரம்
விலகிச் சென்று
சேர்ந்து விட்டீர்கள்
எவ்வளவோ
இறுக்கம் நிறைந்த
நெருக்கமான பொழுதுகளவை
விழுதுகளை அல்லவா
எங்க மனசுகளில்
வியாபித்து விட்டு

நீங்கள்
வியப்புக் குறிகளை மட்டும்
சொந்தமாக்கிக் கொண்டீர்கள் !

□

ஆண்டவனே நீ ... !
அவசரமாக
அறிவிக்கத்தான் வேண்டும்
இன்னொரு இறைவன்
இருக்கிறான் என்ற
சேதியினை
ஏனென்றால் ...
எங்கள்
தீர்ப்புகளுக்கு அப்பீலை
அடுத்த ஆண்டவனிடமாவது
அளித்து அறவிடத்தான் !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் நீ
நியாயவாதியாக இருந்திருந்தால்
இந்த
நிரபராதிகளைக் கூடவா
நிராயுதபாணியாக
விட்டிருப்பாய் !

□

பெண்கோழி முட்டைகளை
அதிக நாட்களுக்கு
அடைகாக்கும் முயற்சி
ஆபத்துத்தான் என்பதை
உங்கள்
தாடிகள் கூட
எமக்கு
காட்டிக்கொடுத்து விடுகிறதே

□

என்ன சகோதரா
கடவுளாகி விட்டீர்களா ...
ஐ மீன்
சிலையாகி விட்டீர்களா ?

□

கண்ணீர் கனத்தால்
இங்கு
கற்கள் கூட
கண்ணகியாகி விடுகின்றன
காரணம்தான் ...
புடம் போட்ட உங்களை
படம் போட்டு
நிறுத்தி விடுகிறதே !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்யலாம்
வாழ்க்கையைப் புரிந்து கொள்ள
வழக்காடிக் கொண்டிருக்கும்
வாலிபகை
நான் மட்டும் இருப்பதனால்
என் முன் வரும்
சோக தீர்ப்புகளைக் கூட
என்னால்
சொந்தம் கொண்டாடத்தான்
முடிகிறது. முடிவினில்.

□

ஓ ... அத்தானே
சத்தான வார்த்தைகள்
இவை என்றாலும்
ஏற்கனவே அவன்
செத்தானே

□

ஒரு பெண் முட்டாள்
தெரிந்து செய்த
தவறைக் கூட
உதாசீனம் செய்து விட்டு
அதே கும்பலுக்கு
இன்னும் நீங்கள்
பட்டிமன்றம் என்றே
பறைசாற்றிக் கொண்டீர்களே
அப்போது
உமை நாம்
அடையாளம் கண்டுகொண்டோம்

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது இத்தனைகால
இடப்பெயர்ச்சியின்
இரகசியம் கூட
ஊருக்குள்
பொசிந்து விடும்
என நினைத்தா ...
கூதல் காற்றுப் பட்டால்
கரைந்து விடும்
உப்புக்கல் நீ
இந்த
அடைமழையில் கூட
அறவே கசிய மறுத்தாய் ?

தாங்கள் அந்த
பாலைவன தேசத்திலும்
உங்கள்
நேசக் கரங்களை
எம் பால்
பிரார்த்தனைக்காக
பதியம் போட்டுக்கொண்டீர்களே
அப்பாடா நீர்
எம்மாத்திரம் பாரம்டா !

இத்தனை சிறப்புக்களும்
கொண்ட
திறப்பை ஏன் இன்று
ஒளித்து வைத்து விட்டு
எங்கள்
ஒரே விழிகளில்
ஓர்
ஒப்பத்தரவையை
விதைக்கிறாய் ?

☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேவலம் எமக்கு
இதய மேடுகள் இருப்பதை
அவ்வப்போது
இருமிக்காட்ட வேண்டி இருக்கிறதே
என்ன செய்யலாம்

□

ஒரு மீன்
செய்த தவறுக்காக
பல மீன்களின் ஆசைகளை
நதி நிராகரிப்பது
சரியா நண்பா
இல்லை,
சதியா நண்பா

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் ...
ஆறாத காயங்களை
அசறு அகற்றிவிடும்
உங்கள்
தனிமைத் தவத்தைக் கலைக்க
மோனச் சலங்கைகளாக
நான்
நான்கு மடல்களை
அவசரமாக அனுப்பி இருந்தும்
பின்புதான் தெரிய வந்தது
நண்பா நீ
மாமுனிவனென்று !

□

கேவலம்
ஆறுதலுக்காக அவ்வப்போது
தபாற்காரனை
விசாரித்ததுதான் மீதம்
கடைசியில்
காலம் தந்த பதிலோ
இரண்டு வருட
பூர்த்தியை மட்டும்தான் !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக அல்ல
என் முயற்சியின் தொடராக
இம்மடலையும்
வரைந்து தருகிறேன்
தயவு செய்து
பேராசையின் எதிர்ச்சொல்
நிராசை என்பதை
நிரூபித்து விடாதீர்கள் !

□

உங்க
சோக வயலினின்
கண்ணீர்த் தந்திகளை
வேகமாக அறுத்து விட்டு
என் பண்ணீர்
தபாலிதற்கு
தயவு செய்து
தமிழ் தர மறுக்காதீர்கள்

□

இவ்வண்ணம்
(ப)கைதவறிய மைத்துனன்

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “ செல் ”லுழுந்து செத்திடுவாய் !

**மனித இதயங்களை எல்லாம் மறுதலித்து விட்டு சாதாரண இயந்திரங்களின் வாக்கு மூலத்தை மனிதன் எப்போது நம்பத் தொடங்கினானோ, அப்போதே இந்த இயற்கைகளையெல்லாம் மறந்து விட்டு ; செயற்கைகளுக்குக்கூட நேர்ச்சை வைக்கக் கற்றுக் கொண்டான் பார்த்தீர்களா ... வேடிக்கைதான்.**

*பண்டைய மூதாட்டிகளோ*
*இடி விழுந்து சாவதற்கு*
*இறைவனைக் கேட்டனராம்*
*இன்றைய மூதாட்டிகளோ*
*செல் விழுந்து சாவதற்கு*
*இறைவனைக் கேட்கின்றனர் !*

☐ ☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை !

வாழ்க்கை என்றால் என்னவென்று வகைப்படுத்தி, சிறைப்படுத்தி வரைவிலக்கணங்கள் வகுத்துத் தந்த சிந்தனை வாதிகளெல்லாம், வாங்கித் தந்த வயசான வாசகம்தான் இது

ஓ ... வாசகர்களே ...

சறுக்கி விழுங்கள் பரவாயில்லை ; தடுக்கி விழாதீர்கள் !

*வாழ்க்கையை விட*
*நீளமான கம்பம் ...*
*வெற்றியை விட*
*அதிகமான சன்மானம் ...*
*முயற்சியை விட*
*வேகமான முன்னேற்றம் ...*
*தோல்வியை விட*
*கனமான ஏமாற்றம் ...*

□

*எங்கே மனிதா !*
*இவை நான்கும்*
*இருக்கிறதா உன்னிடத்தில் ...?*
*" ஏறு சறுக்கு மரத்தில் " !"*

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவூட்டுகிறோம் !

கடந்து காலியான கணப் பொழுதுகளிவை

கிழக்கு மக்களே ... உங்கள் ஞாபகத்தின் சொகுசுக் காக மீண்டும் உங்கள் பழைய மூச்சுக்களை பார்வைக்கு இழுத்து வருகிறேன். (சு)வாசித்து பாருங்கள்.

*ஓ ... சமூகமே !*
*உங்கள்*
*தற்கொலை முயற்சிக்கு*
*இதுவே சுமுகமே*

□

*ஒன்றில் ...*
*கிறனைட் வெடித்து*
*வெந்து சாகலாம்*
*அன்றில் ...*
*சயனைட் கடித்து*
*முந்திப் போகலாம்!*

□

*எதுவோ இன்னும்*
*ஒரு மணி அவகாசம்*
*இதுவே எங்கள்*
*தலைமையின் கரகோஷம் !*

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் என்று சொன்னால்
மண் கூட
மதிப்பளிக்கும்
காலமடா காலம்

□

கன்னி என்றாலே
தண்ணீர் கேட்கும்
தலைவருக்கும்

□

வளிக்குக்கூட வழிவிடாத
கஞ்சன் இடத்திலும்
றவுன்ஸ்களைக் கண்டால்
தங்கப் பவுண்ஸ்களும்
படிதாண்டுதடா !

□

சென்றி சிலதைக் கண்டால்
பன்றிகள் கூட
பதுங்கித்தான் வரவேண்டும்

□

சரஸ்வதிகளால் கூட
சரிவராத சமாதானம்
இதை நம்ம
அரச பதவிகளால்
சரிவருமென்று
நம்பி நலைவது
மடமையடா தம்பி !

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமதித்தது போதும்
இனித்தாமதித்தால்
தலைகூட அல்ல
நாளை நம்
சிலைகூட
விலையாகலாம் !

□

இப்போது ...
எங்களிடமும் ஏகே
இனி நாங்கள்
எதற்கும் ஓகே !

□

அதோ கேட்கிறது
வெடிகள்
இனி எங்க
பெடிகள் விடான்கள் !

□ □

R11422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரையூர் மு. றூகா

' கருங்கொடித்தீவு ' என்று செல்லமாக அழைக்கப்படுகின்ற ஒரூர் அக்கரைப்பற்று. இவ்வூர் சாஹித்திய மண்டலப் பரிசுபெற்ற மூன்று எழுத்தாளர்களை புதல்வர்களாகப் பெற்ற புளகாங்கிதத்தில் பூரித்து நிற்கிறது.

இங்கே - புனைகதைத் துறையில் நாவலாசிரியர் அ. ஸ. அப்துஸ் ஸமது, 'வேதாந்தி' ஆகிய இருவரும் பதித்த இலச்சினைகள் ஈடுஇணையற்றவை. கவிதைத் துறையில் கவிஞர் ஏ. இக்பால் அவர்களுக்குப் பிறகு மு. ஹ. ஸெய்கு இஸ்ஸதீன் (வேதாந்தி) எழுதிய கவிதைகள் ஆரோக்கியமானவை. பிற்காலத்தில் சுமார் இருபதுக்கு மேற்பட்ட யுவன்கள் இத்துறையில் ஈடுபாடு காட்டினாலும், இவர்களது ஈடுபாடு தொடர்ச்சியாக ஈடுபடாதது பெருங்குறைபாடாகும். இக்குறைபாடு நிறைபாடானது அல்ல என்று குறித்துரைப்பது போல குரல் ஒலிப்பவர் அக்கரையூர் மு. றூகா அவர்கள்.

பொதுசனத்தொடர்பு சாதனங்கள் மூலம் பர்ணமிக்க வேண்டிய இலக்கிய முதிர்ச்சியை எடுத்த எடுப்பிலேயே ' கிழக்கில் வெளுக்காத வழக்கு ' என்ற புதுக்கவிதைத்தொகுதியை வெளியிட்டதன்மூலம் தொடக்கிவைத்த இவர், இன்று ' புயல் வாசித்த புல்லாங்குழல் ' மூலம் தடம் பதிக்க முனைகிறார்.

தன்னையும், தான்வாழும் சூழலையும் காயப்படுத்திய நிகழ்வுகளை உள்வாங்கி கலைத்துவப்படுத்தி அக்கரைப்பற்றின் வரலாற்றில் முதலாவது புதுக்கவிதைத் தொகுதியை வெளியிட்ட அக்கரையூர் மு. றூகா... (றுமைஸ் கான்) முபாறக் தந்தைக்குப், ஹலீமா தாய்க்கும் தலை மகனாகப் பிறந்த கலை மகனாவார்

ஆளுமைநிறைந்த விமர்சனங்கள்தான் தம்மை ஆட்படுத்தும் என்பதில் அசையாத நம்பிக்கைவைத்துள் கவிஞர் மு. றூகா அவர் இலக்கிய உலகம் அ[illegible] படுத்தி ஆலிங்கனம் ஆசீர்வதிக்கவேண்டும் பது எனது அவா,

*- அன்புடன் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org